ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை

பத்ராதிபர் :—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 5.] ராக்ஷஸஹூ ஆடி௴ [ஸஞ்சிகை 6.

த்ரிபுவனகமனம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததானே - வபுரலககுலாவ்ருதானநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஹரித்வார உத்ஸவம்.**

(1) ஜூலை மாஸம் "மாடர்ன் ரிவ்யூ" பத்ரிகையில், அந்தப் பத்ராதிபர், அவர் போன்ற மற்றொருவரை அநுஸரித்து, ஹரித்வார கும்பமேளத்தில் கூடிய ஸாது எனப் பெயர்கொண்ட துறவிகளுக்கு அறிவிப்பது யாதெனில் : "நீங்கள் ஐஹிக ஸுகங்களைத் துறந்தீர்; உமது ஆத்மாக்களின் ஜ்ஞாந வ்ருத்தியையும், குணபரிபாகங்களையும் உத்தேசித்துச் சரீரங்களை நிராகரித்தீர்; இனி உலகத்தைத் துறக்க எண்ணவேண்டாம்; அதைக் காட்டிலும், அதற்கு வ்ருத்தியையும், யசஸ்ஸையும் உண்டாக்க யத்தனிப்பீர்கள்; ஏனெனில், அது உமது த்யாகபூர்வகமான க்ரியைகளை அபேக்ஷிக்கின்றது. மிக்க தூரத்தில் எங்கோ இருக்கும் பரமபதத்தில் உங்கள் ஸொந்த ரக்ஷணத்தை விரும்பி, நீங்கள் க்லேசித்தல் கூடாது. ஆனால், இன்மையாலும் துன்பத்தாலும் வருந்தும் ப்ராணிகள் நிறைந்த இவ்வுலகின் ரக்ஷணத்தின் பொருட்டு

நீங்கள் ப்ரமப்படவேண்டும்; எப்படி யென்றால் உங்கள் ஜ்ஞாந சக்ஷுஸ்ஸால் அறியப்பட்ட பரலோகத்தை இவ்வுலகத்தில் வரும்படிச் செய்வீர்கள்."

அந்தப் பத்ராதிபர் ப்ரஹ்ம ஸமாஜத்தினர்.

(2) ஆர்ய ஸமாஜ பத்ரிகையாகும் குருகுல ஸமாசாரத்தில் (ஜூன்மாஸம்) ஹரித்வார மஹாகும்பத்தைப்பற்றிய கண்டநக் குறிப்பை அப்பத்ராதிபர் இவ்வகை முடிக்கின்றார் :—"வெளிவாருங்கள். இழக்கக் காலமில்லை. இந்தப் பொம்மை பூஜைக்கு, இந்த விக்ரஹாராதநத்துக்கு, இந்த அத்யந்த அகாரண விப்ஶ்வாஸத்துக்கு, விரோதமாக ஒரு படையெடுத்தலைக் கூட்டுவோம். படித்த மூடர் சிலர், விக்ரஹ பூஜையை ஸத்யுக்திகளால் ஸ்தாபிக்க முயல்வார். அவர்கள் விக்ரஹங்களில் நிற்கும் ஒரு தேவனைத் தாங்கள் தொழுவதாகச் சொல்வர். அவர்களிடம் க்ஷமையைப் பாராட்ட வேண்டாம். அவர்கள் தத்காலம் நீங்கிப்போன அடிமைகள் வ்யாபாரத்தை நிலைநிறுத்த ப்ரயத்நித்த க்யாதி பெற்ற அமெரிக்கா குடியரசின் தென்நாடுகளை யொத்தவர். இவ்விஷயங்களில், பொறுமை பாபம்; அரை மநஸுடன் கண்டித்தல் இன்னும் கொடியது. இவ்வித வழக்கங்களுக்குக் காரணமாகும் விக்ரஹ பூஜை, ஸத்யுக்திகளால் பரிஷ்கரிக்கக் கூடியதாயினும், வேருடனும் கிளையுடனும் வெட்டத்தக்கதே".

* * * * * *

இது ஆர்ய ஸமாஜத்தினர் யோசனை.

(3) ஏப்ரல் மே மாஸத்திய குருகுலஸமாசாரத்தில், குருகுல கலாசாலையின் வித்யாப்யாஸத்தைப் பற்றி எழுதுவதில் இந்த உக்திகள் காணப்படுகின்றன.

**தத்கால வித்யை.**

"வேதம், ஸ்ம்ருதிகள், தர்சநங்கள், ஶாஸ்த்ரங்கள், ராமாயணம் மஹாபாரதம், இவற்றை முற்றிலும் விலக்குவதாலும், ஹிந்துக்களுடைய அவதார புருஷரென்ன, பக்தரென்ன, இவர்கள் சரித்ரங்களுடைய நிஷேதத்தாலும், ஹிந்துக்களின் பூர்வீகர்களிடம் மதிப்பை யுண்டாக்கத்தக்க ஸந்நிவேசங்களின் அபாவத்தாலும், பஹு ப்ரகாரமாக ஹிந்து ஸம்பந்தமான ஸர்வத்தினுடையவும் ஊர்ஜிதமான தூஷணையாலும், (கிறிஸ்தவ ஸ்கூல்களி

லும், கலாசாலைகளிலும்) ஹிந்து சிறுவர்க்குள், வ்யக்தமாக மத விஷயங்களில் விரோதமோ, நிந்தையுடன் கூடிய உதாஸீந தையோ உண்டாய்விட்டன. இத்தகைய ஸந்நிவேசங்கள் தேசப்ர யுக்தமாயோ, ஜாதிப்ரயுக்தமாயோ, ஸரியான மரியாதையை ஜநிப் பிக்க முற்றிலும் தகாதவை; இம்மரியாதையின்றித் தேசாபிமாந மும், வ்ருத்ததார்ட்யமும் ஒருநாளும் பரிணமிக்கமாட்டா. இப் பள்ளிக்கூடங்களில் படித்து வெளிப்பட்டவர்கள், வெளியாகக் கிறிஸ்தவ ராகாவிட்டாலும் அதைக் காட்டிலும் கெட்டுப்போன வராய், ஹிந்துத்வேஷிகளாய்ப் போந்தார்கள்."

*     *     *     *     *     *

(4) "ராஜாராம் மோஹன்ராய் என்பவரைப் போன்ற மனிதர்............வெளிப்படையாகக் கிறிஸ்தவ மதத்தை ஸ்துதித்து, ஹிந்துக்களுடைய தர்மத் தையும் நாகரிகத்தையும் தூஷித்தனர். ராஜா, தனது செல்வத்தாலும், அந்தஸ்தாலும், இங்கி லீஷில் விசேஷ ஜ்ஞாநத்தாலும், ஹிந்துமதத்தை இன்னும் நன் ருக அழித்து, கிறிஸ்தவமதத்துக்கு அதிகமான உபகாரத்தைச் செய்யும் நிமித்தமாகத் தான் வெளிப்படையாகக் கிறிஸ்தவராக வில்லையென்று சொன்னர்."

ராஜாராம் மோ ஹன்ராய்.

(5) இன்னும் அதே ப்ரகரணத்தில், ஆதம் எனும் ஒரு பாதிரி, வீட்டில் அவர் ஆகாரம் அருந்தினரென்றும், அப்போது பாதிரி வேலைக்காரரை விலக்கினரென்றும், அவர்கள் தான் செய்ததை வெளியில் ப்ரஸ்தாபித்துத் தான் ஜாதியிழந்ததைப் பஹிரங்கப் படுத்துவாரென்று பயந்ததாகவும், அவர் இங்கிலாண்டி லிருந்த போது, ரஹஸ்யமாய் வெள்ளைக்காரர் வீடுகளில் சாப்பிட்டாரென் றும், இந்தியாவில் தனது நிலைமை கெடாதிருக்க வேண்டுமெனக் கருதி, வெளிப்படையாக அவ்வண்ணம் புசித்திலர் என்றும், கல் கத்தாவில் கிறிஸ்தவ மிஷனை ஸ்தாபிக்க 5000 ரூபாய் சந்தா கொடு த்தனர் என்றும், பால்டிமோர் எனும் பட்டணத்திலிருந்த ஒரு அமெரிக்கா பாதிரிக்குத் தன் ப்ராணனுக்கு அபாயம் நேரிட்ட போதிலும், அவர்களுக்குத்தான் உபகரிக்க இச்சிக்கிறதாகவும், இயேசுவும் அவர் சிஷ்யர்களும் ஏற்படுத்திய மதம் யுக்திக்குப் பொருந்தியதாகவும், மோஸஸ் முதலானவர் வெளிப்படுத்தய ப்ர மாணங்கட்கு ஒத்ததாகவும், தேவன் ஒருவன் என்பதும், கிறிஸ்

துவின் மிஷனும் எங்கும் பரவ வேண்டிய காலத்தைத் தான் கோலினதாகவும் எழுதினரென்றும், அவர் வேண்டுகோளின் பேரில் ஸ்காட்லெண்டு சர்ச் ஸபையார் தமது முயற்சியை இந்தியாவுக்குப் பரவச்செய்ய வேண்டப்பட்டாரென்றும் சொல்லப் பட்டிருக்கின்றது.

*   *   *   *   *   *

**ப்ரவ்ருத்தி மார்க்கப்ரியர்.**

இவற்றுள் (1)ம் விஷயத்தைப்பற்றி யாம் சொல்வதென்னென்றால், அந்த வசநங்களை ஸாதுக்கள் ஆதரித்தால், அவர் பரோபகாரம் செய்வார்களாவர். வக்தாவுக்கு லோகாந்தரத்தில் விஶ்வாஸ மாந்த்யம் ப்ரகாசிக்கின்றது. ஈஶ்வரனிடம் அநந்ய பக்தியின்றி ஆத்மாவுக்குப் பரமசாந்தி இல்லை. ஈஶ்வர பக்தர்க்குள் ப்ரவ்ருத்தி மார்க்க ப்ரியர்கள் பரோபகாரத்தை ஈஶ்வர ப்ரீதிக்காகச் செய்து, ஈஶ்வரார்ப்பணம் செய்யக்கடவர். நிவ்ருத்தி மார்க்க ப்ரியர் இந்த லோகத்திலேயே ஈஶ்வரனிடம் தமது சித்தத்தை முற்றிலும் செலுத்தி நிற்பர். ஒருவரை மற்றொருவர் நிந்தித்தல் பாபம்.

*   *   *   *   *   *

**பரலோகம் இவ்வுலகம் வாராது.**

பரலோகம் இவ்வுலகம் வாராது. இவ்வுலகத்தின்கண் ஜந்மம், வ்ருத்தி, ஜரை, மரணம் முதலியவை மநுஷ்ய சரீரங்களை விடமாட்டா. வ்யாதி, துர்பிக்ஷம், பந்துவியோகம், இத்யாதி காரணங்களால் மனிதர் துன்பப்படுவது நிலைத்துதான் நிற்கும். என்றைக்கு உலகரீதி மாறியது? அலெக்ஸாண்டர் பரர் நாடுகளைப் படையெடுத்துப் பிடித்து எவ்வளவு ப்ரஜைகளைக் கொன்றான்? ரோம் தேசத்தார் எவ்வளவு நாடுகளின் ஸ்வாதந்த்ரியத்தை அழித்தார்? அதற்கென்று எவ்வளவு ஜநங்களைக் கொன்றனர்? மகம்மதியர் எவ்வளவு ராஜ்யங்களை அழித்தனர்? எவ்வளவு ஜநங்களைக் கொன்றனர்? ஸ்பேய்ன் தேசத்தினர் அமெரிக்கா கண்டத்தில் ராஜ்யங்க ளழித்ததும், ஜநங்களைக் கொன்றதும், யார் மறக்கக்கூடும்? இந்தக் கூத்துகளை ஏஷியா கண்டத்தில் போர்ச்சுகல் தேசத்தார் எம்மட்டும் நடத்தினர்? பலவந்தமாக மகம்மதியராகவும் கிறிஸ்தவராகவும் செய்யப்பட்ட ஜநத்தொகையை யோசியுங்கள். தத்கால யுத்தத்தை யோசியுங்கள்.

ஐரோப்பியர் இதர கண்டங்களையும் அவற்றின் ப்ரஜைகளையும் தமக்கு உட்படுத்தினர்கள். முதலில் பலத்த தேசங்களாகிய, இங்கிலாண்டு, ப்ரான்ஸ், ரஷ்ஷியா, இவை அதிக தேசங்களைப் பற்றின. ஜர்மனி புதிதாய் உயர்ந்தது. ஆதலால், அது பற்றிக் கொள்ளப் பூமியில் புதுநாடுக ளில்லை; இங்கிலாண்டு, ப்ரான்ஸ், ரஷ்ஷியா, இந்தத் தேசத்தார் கைக்கொண்ட நாடுகளைப் பலாத் காரமாகக் கவர வன்ரு ப்ரக்ருத யுத்தம்? அவர்க்குத் தெரியா மலே, ஜர்மானியர் 40 வருஷங்களாக இந்த யுத்தத்திற்கு ப்ரயத் நம் செய்தனர். இதன் முடிவுக்குள் எவ்வளவு ஜநங்கள் இறப்பர்? யாருக்குத் தான் துன்பமும் துக்கமும் வளராமல் இந்த யுத்தம் முடிவுறும்? இப்படித்தான் பரலோகம் இவ்வுலகம் வரக்கூடும்.

பகவானையும், அவன் ஸ்வரூப குணங்களையும், அவனுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தத்தையும், நம் ஆத்மாக்களுடைய பாரம வதமான நன்மையையும் நினைப்பவன், பரலோகத்தை இவ்வுல கிலா காணக் கருதுவான்? தன் மட்டும் கருதலாம்; அப்போது பகவானை நினைத்து, மற்றவற்றுள் பற்றை அறுத்துக் கருதவேண் டும். நிவ்ருத்தி மார்க்கம் ருசித்தவர், ப்ரவ்ருத்தி மார்க்கத்தை ஆதரிக்கமாட்டார். ப்ரவ்ருத்தியில் ருசியிருந்தால் அதைப் பரோ பகாரமாகவும், பகவத் ப்ரீணநமாகவும் செய்தல் வேண்டும். இதை ஜநங்கள் தனித்தனியாகச் செய்தாலும், சேர்ந்து செய்தாலும் வித்யாஸமில்லை.

நித்யனுன ஆத்மாவுக்கு அநித்ய சரீரங்களுடைய போஷ ணத்தால் பரமசாந்தி உண்டாகாது. மநுஷ்ய சரீரங்களுடைய ஸுகத்தை ப்ரதாநமாக எண்ணுபவர் உயர்ந்த மதத்தைச் சார்ந் தவ ரென்பது ப்ரமையே.

* * * * * *

**அர்ச்சா விஷய த்வேஷம்.**

ப்ரஹ்ம ஸமாஜமும், ஆர்ய ஸமாஜமும் ஆர்ய மதத்தை முற்றிலுமோ அதன் சில பாகங்களையோ த்வே ஷித்துப் பிறந்தன. (2) லக்கமிட்ட விஷயத்தை யோசித்தால் ஆர்ய ஸமாஜத்தினர், விக்ரஹங் களையும், தேச விசேஷங்களில் மாஹாத்ம்ய விச்வாஸங்களையும் அழிக்க விரும்புகின்ருர் என்று ஏற்படு கின்றது.

குருகுலபத்ராதிபர் அதை நிறைவேற்றுவதற்காகத் தம்மவருடைய தோள்வலியை ஆச்ரயிக்கின்றார். அவர் புத்தி பலத்தை ஆச்ரயிக்காத காரணம், அவர் இஷ்டத்தை அது ஸாதித்துக் கொடாதெனும் நிச்சயம் தான். மஹம்மதியர் மிகுந்ததும், அவரால் சிரகாலம் ஆளப்பட்டதுமான பஞ்சாப் தேசத்திலும், அதன் அருகாமையிலும், பூர்வம் ஸநாதந தர்மநிஷ்டராய் இருந்தவர்க்குள்ளும் இத்தகைய யோசனைகள் உதிப்பது ஸஹஜமே. அஹிம்ஸை பரம தர்ம மெனப்பட்டது. பரர்க்குச் சரீரத் துன்பம் உண்டு பண்ணுவதும், மனவருத்தம் உண்டாக்குவதும் ஹிம்ஸையே. ஆர்ய ஸமாஜத்தினர்க்கும், ஏனையோர்க்கும் ஹிந்துக்கள் துன்பம் நினைப்பாரல்லர். அவர் விச்வஸித்துப் புரியும் பகவதாராதநத்தைப் பலாத்காரமாக அழிக்க விரும்பினல் பரஹிம்ஸா ரூபமான பாபம் ஸித்திக்கு மென்பதில் யாம் கிஞ்சித்தும் ஸந்தேஹம் கொள்ளோம்.

* * * * * *

**கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள்.**

குருகுல சமாசாரத்தின் (3) - வது உக்திகளை நாம் ஆதரிக்கின்றோம். தத்கால வித்யாப்யாஸம் தேசநன்மையை ஸாதிக்கமாட்டாது. அது இந்தத் தேசத்தாருடைய வித்யை, விசேஷகுணங்கள், நாகரிகம் இவற்றை அழித்துவிடும். பொது த்ரவ்யத்தினின்று ராஜாங்கத்தாரிடம் உபகாரமடைந்து, பொதுவான கலாஸங்கத்தாருடைய அநுமதியையும் பெற்றுக் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில், பாதிரிமார் ஹிந்துக்களுக்கு ஸ்வமதத்தைப் போதிப்பது உசிதமோ? அபேக்ஷிக்காதவர்க்கு அந்த மதபோதநம் நிவர்த்திக்கப்படவேண்டுமென்று சிலர் கேட்டால், வித்யாசாலைகள் குறைந்துபோமென்றும், ஹிந்துக்கள் இந்தக் கஷ்டம் படவேண்டுமென்றும், கிறிஸ்வரும், அவரிடம் அபிமாநித்த ஹிந்துவெனப் பெயர்கொண்டவரும், ஆக்ஷேபிக்கின்றனர். இப்படிச் செய்வதில், பரர் உன்னிடம் எவ்வண்ணம் நடக்கவேண்டுமென்று இச்சிக்கின்றையோ, அவ்வண்ணமே நீயும் பரரிடம் நட- எனக் கிறிஸ்து சொன்னதையும் மறக்கின்றார்கள். ஸ்வமதத்தில் துரபிநிவேசம் கொண்டவரும், நூதநமாய்ப் பரமத ப்ரவிஷ்டர்களும், நாஸ்திகரும் ந்யாயவிசாரம் செய்யத்தகார். கிறிஸ்தவர்

பள்ளிக்கூடங்கள் குறைந்தால் வேறு பள்ளிக்கூடங்கள் உண்டாகாதென்று எண்ணுதல் ப்ரமையே.

*   *   *   *   *   *

**ப்ரஹ்ம ஸமாஜம்.**

(4), (5) லக்கமிட்ட வசநங்களின் உண்மை நமக்குத் தெரியாது. மதங்களை உண்டாக்கினவர் ஸாதாரணமாக இந்த லோகத்தை த்யஜித்தவராகவும், லோகாந்தர ஸாக்ஷாத்கார முள்ளவராகவும் எண்ணப்படுவார். ப்ரஹ்ம ஸமாஜ காரணபூதர் ஐஹிக த்யாகம் செய்தவரன்று; ஆமுஷ்மிக ஸாக்ஷாத்காரம் உள்ளவருமன்று. அவர்க்கும், மற்ற ப்ரஹ்மஸமாஜ வ்யாபகர்க்கும் கிறிஸ்தவர் ஸஹவாஸமும், அவர் மதத்தில் பக்ஷபாதமும் உண்டென்று தோன்றுகின்றது. ஒரு மதத்தையும் அவர் பூர்ணமாகக் கொள்வாரில்லை. எல்லாவற்றுள்ளும் சில பாகத்தை எடுத்துக் கொண்டும், சிலவற்றைத் தள்ளியும், மதங்களுக்குள் 'greatest common measure' எனத்தகும் பொதுவான அம்சங்களை அவர் ஆதரிப்பதில், அவருடைய இச்சைக்குமேல் அவர் மதத்துக்கு ப்ரமாணம் விதிக்காது. அவர் விச்வஸிக்கும் அம்சங்களுக்கு, அவர், தமது மநஸையே ஸாக்ஷியாகக் கொள்வர். இப்படிப்பட்ட மநோகதியை யோகிகள் தவிர மற்றோர் அடையாரென்றும், ப்ரஹ்மம் சாஸ்த்ரம் ஒன்றினாலேயே அறியத்தக்க தென்றும் வேதாந்த நிர்ணயமிருக்கின்றது. பூர்ணமாகக் கிறிஸ்தவராக இஷ்டப்படாதவர்க்கு ப்ரஹ்மஸமாஜம் ஓர் ஆச்ரயம்.

எந்த ஸமாஜத்தினிடமும் நமக்கு த்வேஷமில்லை. அபிப்ராய பேதங்கள் விவாத விஷயமானாலும், ஹிந்து மதத்தினர் அதைக் குறித்து த்வேஷம் கொள்ளார். அவர்க்குள் நின்று வெளிப்பட்டவர் தான் அவரிடம் மிகவும் த்வேஷம் பாராட்டுகின்றார்.

*   *   *   *   *   *

**தத்வத்தின் நிலை.**

சரீரவானான சேதநன் சரீரவியோகாநந்தரம் தான் அநுவர்த்திப்பதை நம்பாவிட்டால், சரீரவானாக இருக்கும் தனக்கும், சரீரவான்களாயிருக்கும் பிறர்க்கும், தத்கால ஸ்திதியில் இஷ்ட ஸாதநங்களையும் அநிஷ்ட நிவ்ருத்தியையும் புருஷார்த்தமாக எண்ணி, அவற்றினிமித்தம் மாத்ரம் ப்ரயாஸப்படுவது யுக்தமே. ஆமுஷ்மிக

த்தை நினைக்காமல் ஐஹிகத்தைச் செம்மைப்படுத்த வேண்டு மென்பதும் அவனுக்கு ஸஹஜமே. அவன் தடஸ்தனுகில், தனது நாஸ்திகதையை லஜ்ஜையின்றி அப்யுபகமம் செய்வன். தெய்வத் தையும் லோகாந்தரத்தையும் அவன் நம்புவதாகச் சொன்னுல் அவனை யாவரும் நம்பமாட்டார்; நம்பவும் கூடாது.

காலம், தேசம், சேதநாசேதந ரூபமான வஸ்துக்கள், இவற்றை சூந்யவாதி தவிர, மற்றவர் ஒப்புக்கொள்வர். இவற்றின் ஆநந்த் யம் ஸாக்ஷாத்தாக நமக்குப் புலப்படாது. அது அநுமாநத் தால் ஊஹிக்கத்தக்கது. அந்த ஊஹம் அவற்றின் எல்லையற்ற இருப் பில் விச்வாஸம் த்ருடமாய் ஏற்படப் போதுமானது.

இப்படி அநாத்யநந்தமான காலம், எல்லையற்ற தேசம், ஸங் க்யாதீதமான சேதநவர்க்கம், எங்கும் பரவிய ப்ரக்ருதியின் ப்ரவாஹம், இவற்றின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்குக் கார ணமாய் நிற்கும் ஈச்வரன், இந்தத் தத்வங்களை ஆஸ்திகர் யாவ ரும் ஒப்புக்கொள்வர். ஈச்வரனுக்கு மற்றவை ப்ரகாரங்கள். ஈச்வரனை யன்றியில், பிந்நமான ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளு டன் கூடிய மற்ற தத்வங்களுக்குச் சேர்க்கையும், சேர்ந்துண்டா கும் ப்ரவ்ருத்திகளும் அவற்றின் நையத்யமும் கடிக்கமாட்டா.

நித்யசேதநன் ஒருவன் நித்யரான பகு சேதநர்க்கு ஸகல புருஷார்த்த ப்ரதனென்று ச்ருதி கூறியது. அவனுடைய ப்ர காரங்களான சித் அசித் பதார்த்தங்களின் ஸ்தூல ஸூக்ஷ்மா வஸ்தைகள் தான் ஸ்ருஷ்டி ப்ரளய மெனப்படும்.

இருப்பும், ஜ்ஞாநமும், ஆநந்த்யமும் தான் ப்ரஹ்மத்தின் தன்மையை நிரூபிக்கும் குணங்கள். அநந்தமான காலதேசவஸ் துக்களால் அளவிடக்கூடாது ப்ரஹ்மத்தினுடைய அநந்தமெனும் தன்மை. ப்ரஹ்மம் ஸர்வவ்யாபி யானபடியால், ஸர்வத்தையும் உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கின்றுன் நாராயணன் என்று ச்ருதி சொல்லிற்று. ஸர்வ வஸ்துக்களின் நியமநார்த்தம் அவற் றின் உள்ளேயும், சேதநர்களுடைய ஹ்ருதய குகையிலும், அவன் இருக்கின்றுனெனவும், அவன் ஸர்வ ப்ரபஞ்சத்துக்கும் காரண பூதன் என்றும், சேதநர்களால் உபாஸிக்கத் தக்கவனென்றும் ச்ருதி சொல்லிற்று.

அவனுடைய ஸர்வவ்யாபகமானதும் ஸத்யம், ஜ்ஞாநம், அநந்தம் எனும் அவன் தன்மையை விளக்கும் குணங்களால் நிர்தேசிக்கப்பட்டதுமான ரூபத்தைச் சேதநர் ஸாக்ஷாத்கரிக்க யோக்யரல்லர். ஒவ்வொருவர் ஹ்ருதயத்தில் அவன் நிற்கும் நிலையில் யோகிகள் மாத்ரம் அவனைத் தர்ஸிக்கவல்வர். அதுவும், அவருடைய யோக நிஷ்பத்தி காலத்தில் தான் கடிக்கும்.

இதரர், ரூபகல்பனை மாநஸிகமாகவோ, மற்ற விதமாகவோ, செய்யாமல் அவனை உபாஸிக்க இயலாது. ஒரு வஸ்துவில் ப்ரஹ்ம த்ருஷ்டி செய்தாவது ப்ரஹ்மத்தை அவர் உபாஸிக்கக் கூடும். இத்தகைய அதிகாரிகளுக்கு அவதார காலங்களில் அவதார ரூபங்களும், மற்ற காலங்களில் அர்ச்சைகளும், உபாஸநார்த்தம் உதவுகின்றன. இது உண்மை. ஜ்ஞாதாக்கள் இந்த அம்ஸங்களை மறுக்கமாட்டார்.

இப்படிப் பகவத் ரூபமொன்று த்யாநவிஷய மாகாமலும், பகவத் கதைகள் ஸ்மரணவிஷய மாகாமலும், பகவத் பக்தி யுண்டாவது துஸ்ஸாத்யம். நமது வர்ணங்களில் பிறந்து, நமது தர்மத்தைத் துறந்தவர்கள், ஈய்வரனை உபாஸிப்பதாகச் சொன்னால், ஒரு விதமான சித்தாலம்பநமுமின்றி அது உண்டாகுமென்று நாம் நம்பமாட்டோம். மதாந்தரர்களுக்குக் கதைகளும் உண்டு; அக்கதைகளை யொட்டி, ஈய்வரனுக்கு யாதேனுமோர் ரூபகல்பனையும் பொருந்தும். ஆதலால் ஓர் மதஸ்தர், அந்ய மதஸ்தருடைய உபாஸநா ப்ரகாரங்களைப் பற்றித் தூஷித்தல் மூடத்தனம். ஸர்வ ஸமனுன ஈய்வரன், ஸர்வ தேசஸ்தராலும் உபாஸிக்கப்படுகின்றான். உபாஸநா ப்ரகாரங்கள் விதியில்லாமல் பேதிக்கும். அவன் விஷயமாகச் செய்யப்பட்ட நாமரூபகல்பனைகளும் பேதிக்கும்.

நமது ஸம்ப்ரதாயஸ்தர் மிகவும் உகந்த மார்க்கம், ஸேஷவ்ருத்தி யெனப்படும். ஸ்வரூபத்தில் நாம் அவன் தாஸர்கள்; அவன் நமக்கு ஸ்வாமி; அவனைப்பற்றி நாம் அத்யந்தம் பரதந்த்ரர்கள்; அந்தப் பாரதந்த்ர்யம் லோகத்தில் பதிவிஷயமாகப் பத்நீக்கு உண்டு; நாயகன் விஷயமாக நாயகிக்கு உண்டு; தன் மனங்கொண்ட நாயகிக்குப் புமான் யாது தான் செய்யமாட்டான்? அவ்வண்ணம் ஈய்வரன் தன் பக்தனுக்குச் செய்யாத தொன்றுமில்லை. தன் நாதனுக்கன்றி நாயகி உயிர்தரிக்காள். அவ்வண்

ணமே ஈப்ஃவரனுடைய நிருபாதிக தாஸனன சேதநன், அவனுக்கென்றே யிருப்பதுடன் தனக்கென யாதையும் புரியான். ஈத்ருஶ பக்தன், தன்னுடைய பதிபாரார்த்யத்தை நினைக்கும் பக்ஷத்தில், அவன் பக்தி, ப்ஃருங்கார ரூபமாகப் பரிணமிக்கக் கண்டோம். இது ஸ்த்ரீகட்கு ஸுகரமாய் அமைகின்றது.

நமது ஸம்ப்ரதாய ஆசார்யர்களில் இவ்வண்ணம் பக்திசெய்தவர்க்குள் நம் சடகோபன் ப்ஃரேஷ்டர். அவர்க்குப் பகவத் ப்ரேமை கஷ்டத்தால் ஸித்தித்தது. ஒரு கஷ்டமும் இல்லாமல் அது ஸ்வபாவத்தில் ஆண்டாளுக் கமைந்தது. சடகோபன் வீடுபெறுமளவும் பகவத்விஷயமாக விரஹாநுபவம் பண்ணினர். விஷ்ணு சித்தன் கோதையோ, அவளுடைய இளமைப் பருவத்தில், அவன் பிரிவைப்பற்றி வருந்தினளில்லை. அந்ய புருஷஸ்மரணை அவளுக்கு உண்டாக அவகாஶமே யில்லை. இப்படிப் பகவத் பாரதந்த்ரியாநுஸந்தாநத்துக்கும், அதற்குசிதமாக அவனுக்கே ஆட்செய்வதற்கும், ஸ்த்ரீஜந்மம் புருஷஜந்மத்தைக் காட்டிலும் பொருந்தியது. இதனாலன்றோ ஸத்கர்ம ஜ்ஞாநாதி ஸாமக்ரி இல்லாமலே வ்ரஜாங்கனைகள் விஶேஷித்தனர். அவர்களுடைய அநுபவத்தை, அவரடைந்த விப்ஃலேஷரூபமான கஷ்டத்தை, அவ்வளவாக அநுபவிக்காமல், கண்ணன் அநுபவம் கரஸ்தமென நினைத்து ஆண்டாளிருந்தனள். அவ்வண்ணம் தாம் அடைந்த பகவதநுபவத்தை நமக்குக் காட்டியருளினர் மாலுகந்த நம்மாசிரியர். இக்கலியுகத்தில், தத்கால ஸ்திதியில், அவர் காட்டிய வழிக்கு மேற்பட்டதொன்று உண்டென்று நினைத்தல் ப்ரமை யென்று சொல்வோம்.

அர்ச்சாவதார ஸஹாயமின்றி, அநந்தன் அவதாரங்களை அநுபவித்து நற்கதியடைந்த மஹாத்மாக்கள் யுகாந்தரங்களில் இருந்தார்கள். இவ்விரண்டு உபகாரங்களுமின்றி உபநிஷத் வித்யைகள் வெளியிட்டபடி த்யாந நிஷ்பத்தியால் பரமனை அடைந்தவர்களும் யுகாந்தரங்களில் உளர். இவ்வதிகாரிகள் இக்காலம் உண்டாகமாட்டார். வ்யாஸ பஃராதிகளால் வ்ருத்தி பண்ணப்பட்ட மதத்தையும், ஶங்கர ராமாநுஜ ஆநந்ததீர்த்தாதிகளால் அப்யுபகமம் பண்ணப்பட்ட மார்க்கத்தையும் தூஷித்து, மந்தமதிகள் ஏற்படுத்தும் ஸமயங்களை ஆர்ய வம்சங்களில் உண்டானவர் ஆதரித்தல் காலத்தின் கொடுமையன்றோ!

213

# தத்வவிசாரம்.

## விபீஷண ஶரணாகதி.

(தொடர்ச்சி)

வ்யாத கபோதோபாக்யாநம் மஹாபாரதத்தில், சாந்தி பர்வத்தில் 143, 144, 145, 146, 147, 148, அத்யாயங்களில் விஸ்தரேண சொல்லப்பட்டிருக்கின்றது. ஒரு வேடன் பக்ஷிகளைப் பிடித்துக் கொண்டு காட்டில் திரியுங்கால், மிகுந்த காற்றுமழை யுண்டாகிப் பூப்ரதேசமெங்கும் நீர்மயமாகி, அவனுக்குக் குளிரும் பசியும் வ்ருத்தி யடைந்து, அவன் வருந்தி ஸஞ்சரிக்கையில், குளிரால் நொந்து கீழே விழுந்திருந்த ஒரு பெண்புறுவை அவன் பிடித்துப் பஞ்சரத்தில் அடைத்துவிட்டு, ஓர் பெரிய வ்ருக்ஷத்தின் கீழ் சென்றான். அப்போது ஆகாசமும் மேகம் நீங்கி, நக்ஷத்ரங்கள் ப்ரகாசிக்க விளங்கிற்று. வேடன் தன் க்ராமத்துக்கு மிகவும் தூரத்தில் தானிருப்பதை யறிந்து, அந்த வ்ருக்ஷத்தின் கீழ் அந்த ராத்ரியைப் போக்க நிச்சயித்தான். கையைக் கூப்பிக்கொண்டு, மரத்தைப் பார்த்து, 'இந்த மரத்தின்கண் எந்தத் தேவதைகளிருக்கின்றார்களோ அவர்களை நான் ஶரணமாக அடைகின்றேன்', என்று சொல்லிவிட்டு, ஓர் கல்லின்மீது தலையை வைத்துக்கொண்டு, உதிர்ந்த இலைகளைப் படுக்கையாகப் பரப்பித் துக்கத்துடன் படுத்து நித்ரை போயினான். அந்த மரத்தில் வஸித்த ஆண் கபோதம், காலையில் வநத்தில் ஸஞ்சரிக்கச் சென்ற தன் பேடை, வழக்கப்படி ஸாயங்காலம் திரும்பி வாராமையால், துக்கித்துக்கொண்டு, "காற்றுமழை பெரிதா யடித்தது; என் ப்ரியை திரும்பி வந்தாளில்லை; ஏனவள் இன்னும் வந்திலளோ? காரணம் தெரியவில்லை. காட்டில் என் ப்ரியை க்ஷேமமாய் இருக்கின்றனளோ? அவளில்லாமல் என் வீடு ஶூந்யமாக இருக்கின்றதே? பார்யை யற்ற

வீடு அரண்ய மெனப்படும். செந்தாமரைக் கண்ணியும், சித்ராங் கையும், மதுர பாஷிணியுமான என் காந்தை வாராமல் போனல், நான் பிழைக்கமாட்டேன். நான் சாப்பிடாமல் அவள் புசிக்க மாட்டாளே! அந்தச் சீலமுடையாள் நான் குளிக்குமுன் குளிக்க மாட்டாளே! நான் படுக்காமல் சயநிக்க மாட்டாளே! நான் ஸந் தோஷித்தால் தானும் ஸந்தோஷப்படுவள். நான் துக்கித்தால் தானும் வ்யஸநப்படுவள். நான் தூரம் சென்ருல் தைந்யத்தை அடைவள். நான் கோபித்துக்கொண்டாலும் ப்ரியமாகப் பேசு வள். பதிதர்மத்தை என்றும் அநுஷ்டிப்பவள். ப்ராணனிலும் அவள் எனக்கு ப்ரியை. அத்தகையை பத்நீயுடையவன் அன்ருே தந்யன். அவள், நான் பசியில் வருந்தி நிற்பே னென்பதை அறி வளே! அவளுக்கு என்னிடம் அநுராகம் உண்டே! ஸ்திர பக்தி யுண்டே! ஸ்நேஹம் உண்டே! அவளேன் இன்னும் வரவில்லை? பார்யையைக் காட்டிலும் பரமமான அர்த்தம் உலகத்தில் உண் டோ!" என்று ப்ரலாபித்தது. அதை வேடன் கூட்டி லகப்பட்ட பெண் புரு கேட்டு, "அஹோ! இப்படிப்பட்ட ப்ரியனைப் பதி யாக உடைய என்னதன்ருே ஸௌபாக்யம்! எவளிடம் புருஷன் ஸந்தோஷப்படுகின்ருனே அவளன்ருே ஸ்த்ரீ! புருஷன் உகந்த ஸ்த்ரீயினிடம் தேவர்களும் துஷ்டராகின்ருர்கள். எந்த ஸ்த்ரீயி னிடம் புருஷன் ஸந்தோஷிக்கின்ரு னில்லையோ, அவள், பூங்கொத் துடன் கூடிய லதை காட்டுத்தீயினல் கொளுத்தப்படுவது போல், சாம்பலாய்ப் போய்விடுவள்", என்று சிந்தித்துவிட்டு, வேடன் கூட்டினின்றும், துக்கத்துடன் புருஷனைப் பார்த்து, "உமக்கு ச்ரே யஸ்ஸைச் சொல்கின்றேன். காந்தனே! சரணுகதனை ரக்ஷியும்; இந்த வேடன் உமது வாஸஸ்தாந மடைந்து தூங்குகின்ருன். அவன் குளிராலும் பசியாலும் வருந்துகின்ருன். அவனுக்கு உபசாரம் செய்யும். ப்ரஹ்மஹத்தி கோஹத்தி செய்பவரும், சரணுகதனைக் கொல்பவரும் ஸமாநமான பாபிகள். நாம் பக்ஷிகள். நமக்குச் சக்தி யுள்ளவரையில் க்ருஹஸ்த தர்மாநுஷ்டாநம் செய்வோம். அதனல் மரணாநந்தரம் அக்ஷய்யமான லோகங்கள் நமக்குக் கிடைக்கும். நீர் புத்ரவானுக இருந்தும், உமது தேஹச்ரமத்தைப் பாராட்டா மல், இந்த வேடன் த்ருப்தியடையும்படி அவனை உபசரியும்" என்று இவ்விதமாக அந்தப் பெண்புரு சொல்லிற்று. ஆண்புரு வும் அதைக் கேட்டுச் சக்தியுள்ளவரையில் வேடனுக்கு உபசாரம்

செய்தது. அவனைப் பார்த்து, "உனக்கு ஸ்வாகதம்; உனக்கு நான் என்னசெய்யபட்டும்? வ்யஸநப்படாதே. உனது வீட்டில் இருப்ப தாய் எண்ணிக்கொள். நீ எங்களைச் சரண மடைந்தபடியால், விஶ்வாஸத்தால் சொல்கின்றேன். நீ சத்ருவானபோதிலும், எங்கள் வீட்டுக்கு அதிதியாக வந்துவிட்டாய். உனக்கு உசிதமான பூஜையை நாங்கள் செய்யவேண்டும். மரம், தன்னை வெட்ட வருபவனுக்கும் நிழல் தருகின்றது. பஞ்சமஹா யஜ்ஞத்தில் ப்ரவர்த்தித்த க்ரஹஸ்தன் விசேஷமாக அதிதி பூஜையைப் பண்ணவேண்டும். ஆதலால் வ்யஸநப்படாதே. நீ எது கேட்டபோதிலும் அதை நான் செய்கின்றேன்" என்று சொல்லிற்று. வேடன் தன்னைக் குளிர் பாதிக்கின்றதென்றும், அதைப் போக்கவேண்டுமென்றும் கேட்டனன். புருவும் சுஷ்க பர்ணங்களைக் கூட்டிவிட்டு, ஒரு கொள்ளிக்கட்டையை ஸம்பாதித்துக் கொண்டுவந்து, அவற்றின் மீதெறிந்து, வேடனைக் குளிர்காயச் சொல்லிற்று. வேடனும் குளிர் காய்ந்துவிட்டு, மிகவும் ஸந்தோஷம் கொண்டு, என்னைப் பசி பாதிக்கின்றது, உன்னிடம் ஆஹாரத்தை அபேக்ஷிக்கின்றேன்" என்றனன். கபோதமும் "உன் பசியைப் போக்க எனக்கு ஸாமர்த்யம் இல்லை. அன்றன்று கிடைப்பதைக் கொண்டு நாங்கள் ஜீவிக்கின்றோம். யாதொன்றும் சேர்த்து வைப்போமில்லை", என்று சொல்லிவிட்டு, முகம் குன்றிப்போய்ச் சிறிது காலம் யோசித்துவிட்டு, "உன்னை த்ருப்தி செய்கின்றேன். நிமிஷம் பொறு" என்று வேடனுடன் சொல்லிவிட்டு, உடனே சுஷ்க பர்ணங்களில் நெருப்பை மூளச் செய்துவிட்டு, வேடனைப் பார்த்து, "அதிதி பூஜையில் ருஷிகள், தேவதைகள், மஹாத்மாக்களான பிதுர்க்கள், இவர்களுடைய உத்க்ருஷ்டமான தர்மாசரணத்தை நான் கேட்டிருக்கின்றேன். ஆதலால் அதிதிபூஜா விஷயத்தில் நான் புத்தியினல் நிச்சயித்ததைச் செய்கின்றேன். அந்தப் பூஜையை அங்கீகரித்து என்னை நீ அநுக்ரஹிக்கவேண்டும்," என்று ப்ரதிஜ்ஞை செய்துவிட்டுச் சிரித்துக்கொண்டே, அந்த அக்நியை மூன்றுதரம் வலம் வந்து, அதில் ப்ரவேசித்துவிட்டது. உடனே வேடன் அதைப் பார்த்துச் சிந்தையி லாழ்ந்தான். "இதென்ன, நான் செய்தேன்! நான் பாபி, யாவரும் வெறுக்கும் தொழிலுடையோன். எனக்கும் கோரமான அதர்மம் ஸம்பவித்ததே!" என்று சொல்லி அவன் ப்ரலாபித்தான். "என்ன இந்த ரூபமான கர்மம் செய்தேனே!

நல்ல கர்மங்களை விட்டேனே! நிந்தார்ஹனுனேனே! மஹாத்மாவான கபோதம் ஸ்வமாம்ஸத்தை அக்நியில் சுட்டு எனக்குத் தந்ததே! நான் ப்ராணனை விடுகின்றேன். எனக்குப் பெண்டாட்டி எதுக்கு? பிள்ளைகள்தான் ஏன் வேண்டும்? மஹாதர்மமூர்த்தியான கபோத மன்ரு எனக்குத் தர்மம் உபதேசித்தது? இனி என் தேஹத்தைச் சோஷிக்கச் செய்கின்றேன். உபவாஸங்கள் அநுஷ்டித்துப் பரலோகோபாயத்தைத் தேடுகின்றேன்" என்று சொல்லித் தனது தடி, வலை, கூடு, முதலானவற்றை எறிந்துவிட்டுப் பெண்புருவையும் விட்டுவிட்டு, மஹா ப்ரஸ்தாநத்தை உத்தேசித்து நடந்தான். பெண்புருவும் தன் புருஷனை நினைத்துப் புலம்பியது:—"ஓ காந்தனே! உமக்கு நான் என்றும் விப்ரியம் செய்தேனில்லையே! என்னைத் தனியாக விட்டுச் சென்றீரே! ஓ காந்தனே! நீர் என்னை லாளநத்துடன் பஹுமாநித்து வளர்த்தீரே! ஸ்நேஹத்துடனும், மநோஹரமான மதுராலாபங்களுடனும் என்னுடன் ஸம்பாஷித்தீரே! உம்முடன் நான் பர்வதங்களின் குஹைகளிலும், நதிகளின் தாரைகள் விழுமிடங்களிலும், அழகிய மரங்களின் உச்சிகளிலும் ரமித்தேனே! உம்முடன் ஆகாசத்தில் ஸஞ்சரித்து ஸுகமடைந்தேனே! இனி எனக்கு எல்லாம் போய்விட்டதே! பிதா ப்ராதா புத்ரர்கள் இவர் கொடுப்பது மிதம். அமிதமாகக் கொடுப்பவர் பர்த்தாவன்ரு? பர்த்தா தான் நாதன். அவர் தான் ஸுகம் தருவோன். அவர்தான் ஸ்த்ரீகட்குச் சரணமளிப்போன். நாதனே! உனைப்பிரிந்து இனி எனக்குப் பிழைத்திருக்கக் கார்யமில்லை" என்று இவ்விதமாக அப்புரு துக்கித்துப் புலம்பித் தானும் நெருப்பில் விழுந்துவிட்டது. பின்பு ஸுக்ருதிகளான மஹாத்மாக்களால் பூஜிக்கப்பட்டவனும், சித்ர மால்யாம்பரதரனும், ஸர்வாபரண பூஷிதனுமான தனது பர்த்தா, விமாநகதனும், புண்யகர்மம் செய்தவர் விமாந கோடிகளால் சூழப்பட்டவனுமிருக்கக் கண்டு, அவனுடன் சேர்ந்து ஸ்வர்க்கலோகம் சென்றது. வேடனும் இந்த வ்ருத்தாந்தங்களைக் கண்டு, கோரமான வனங்களில் ப்ரவேசித்து, முடிவில் தவாக்நியினல் எரிக்கப்பட்ட சரீரத்தைத் துறந்து, தானும் தனது தபஸ்ஸால் ஸ்வர்க்கம் சென்றனன்.

இந்த உபாக்யாநத்தைப் பகவான் ஸ்மரித்தார். பின்னும் கண்வபுத்ரரான கண்டு என்பவருடைய சரணுகத த்ராண விஷய

மான ப்ராசீந காதையையும் சொன்னர். அதில் இந்த ப்ஂலோகம் உளது:—“[illegible] ॥” “ஓ ராஜனே! கைகளை அஞ்ஜலியில் குவித்துக்கொண்டும், தனது கார்ப்பண்யத்தைக்காட்டிக்கொண்டும், ப்ரார்த்தனையுடன் சரணமடைந்தவன், பூர்வத்தில் சத்ருவாக இருந்தபோதிலும், ஆந்ருஶம்ஸ்யம் எனப்பட்ட தயாகுணத்தை ரக்ஷிக்கும்பொருட்டு, அவனைக் கொல்லலாகாது.” அடுத்த ப்ஂலோகத்தினல், அவன் ஸ்வரக்ஷண விஷயத்திலோ, ஸ்வாபிமத விஷயத்திலோ, விளம்பத்தை ஸஹிக்காதவனய், ஸ்வாபராத நிமித்தம் பயம் கொண்டவனயிருந்தாலும், அந்த விஷயத்தில் விளம்பத்தை ஸஹித்துக்கொண்டு, ஸ்வாபராத நிமித்தம் பயமற்றவனக விருந்தாலும், அயலார் முன்னிலையில் ஶரணுகதனக வந்தானகில், அவன் சத்ருவானலும், ஶாஸ்த்ரார்த்தம் அறிந்தவனனல் ஸ்வப்ராண பரித்யாகம் செய்தாவது ரக்ஷிக்கத்தக்கவன் என்று ஏற்படுகின்றது. இப்படி ஶாஸ்த்ரார்த்தத்தையும், லோகத்தில் ஸத்துக்களுடைய அநுஷ்டாநத்தையும், அநுஸரித்து, ஶரணுகதியின் ப்ரபாவத்தை வெளிப்படுத்திய பிறகு, ஸ்வாமி, தனது நிரங்குஶமான பாரமைப்ஂவர்யத்தையும் காட்டியருள்கின்றர். “[illegible] ॥” “ஓரேதரம் என்னைச் சரணமாக வ்யாகித்து, நான் உனது ஶேஷபூதன் என்று ப்ரார்த்திக்கும் ஸர்வ ப்ராணிகளின் பொருட்டும் அபயத்தைத் தருகின்றேன். இது-எனது வ்ருதம். ஆதலால் இதை நான் எப்போதும் பரித்யாகம் செய்ய அஶக்தன். ஆதலால் ஸுக்ரீவனே! விபீஷணனை அழைத்துக்கொண்டு வா. உங்கள் முன்னல், புத்ரதாராதி ஸர்வத்தையும் ஸம்யக் த்யாகம்செய்து என்னைச் சரணமாக அடைந்தேனென அவன் சொன்னதே போதும். அத்தருணமே அவனுக்கு அபயம் தந்தேன். வந்தவன் விபீஷணனனலும் ஸரி, மஹாபராதியான ராவணனே ஸ்வயம் வந்தாலும் ஸரி, நான் அபயம் தந்து

விட்டேன். சரணமடைந்தேனென அவன் உச்சரித்ததே போது மானது." இந்த ச்லோகங்களால், பகவத் சரணாகதி மநஸால் ஸ்மரிக்கப்பட்டபோதிலும், வாக்கினால் உச்சரிக்கப்பட்டபோதிலும், நிரபராதிகள் விஷயத்திலும், ஸாபராதிகள் விஷயத்திலும், ஸக்ருத் அநுஷ்டாந மாத்ரத்தால் பலிக்குமென்று விளங்குகின்றது. இந்த சரணாகதியின் ப்ரபாவம் பகவானுடையது. இதைச் செய்தவனை அவன் ரக்ஷிப்பதென்று வ்ருதம் கொண்டிருக்கின்றான். இந்த உபாயத்துக்கு அதிகாரிகள் ஸர்வப்ராணிகளும். தேசிகனும் அவர்களை 'அந்தணரந்தியர் எல்லையினின்ற வனைத்துலகும்,' என்று ஸாதித்தருளினர். "துராசாரோபி ஸர்வாஸீ க்ருதக்நோ நாஸ்திக: புரா । ஸமாஸ்ரயேதாதிதேவம் ஸ்ரத்தயா ஸரணம் யதி । நிர்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்மந: ॥" "முன்னால் துர்வ்ருத்தங்களுடன் கூடினவனையும், ஸர்வ பக்ஷகனையும், நன்றிமறந்தவனையும், நாஸ்திகனையும் இருந்தானாகிலும், ப்ரபத்யநுஷ்டாந காலத்தில் ச்ரத்தையோடு ஸர்வகாரண காரணனைச் சரணடைந்தானாகில், அந்தப் பரமாத்மாவின் ப்ராபாவத்தையிட்டு அவனை நிர்தோஷனாக அறிவாய்" என்று ப்ரமாணம் உளது. நிர்தோஷ மென்றதால், ந்யாஸம் ஸர்வ பாபங்களுடைய நாசத்தை உண்டுபண்ணு மென்றாகின்றது. இது ந்யாஸத்தால் உண்டாவது அன்று. ந்யாஸத்தை வ்யாஜமாக அங்கீகரித்த பகவத் ப்ரஸாத ஜந்யம்.

ஸர்வ பூதங்களுக்கும் அபயம் தருகின்றேன் என ஸ்ரீராமன் மொழிந்தார். இதை ஈச்வரனன்றி மற்றோர் சொல்லத் தக்கவரன்று. ஜடாயு மரணகாலத்திலும், "மயா த்வம் ஸமநுஜ்ஞாத: கச்ச லோகாநநுத்தமாந்" என்று ஸர்வேச்வரனை படியாலன்றோ பகவான் அவ்வண்ணம் சொன்னார். அபயம் என்றால் மோக்ஷம். "அத ஸோபயம் கதோ பவதி, அம்ருதோபயோ ப்ரஹ்மாபயம் வை ப்ரஹ்மாபயம் ஹி வை ப்ரஹ்ம பவதி ய ஏவம் வேத", என்கிற உபநிஷத் வசநங்களில் அபய சப்தம் மோக்ஷார்த்தத்தில் உபயோகப்படுத்தியிருக்கிறது.

'ஆந்ருஸம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ஸ்ருத:'.

"தயையானது ஸர்வதர்மங்களினும் ச்ரேஷ்டமானதென்று, உன்னிடமே நான் கேட்டிருக்கின்றேன்" என்று ஸ்ரீராமனுக்கு ஸீதை ஹநுமான் மூலமாகத் தெரிவித்தனள். ஆதலால் பரமாத்வினுடைய குணங்களில் அது உத்க்ருஷ்டமானது. "க்ருபணஜந கல்பலதிகாம் க்ருதாபராதஸ்ய நிஷ்க்ருதிமாத்யாம் । வ்ருஷகிரிநாததயே த்வாம் விதந்தி ஸம்ஸாரதாரிணீம் விபுதா: ।"

"அகிஞ்சநர்க்குக் கற்பகக்கொடியாயும், அபராதம் செய்தவர்க்கு முக்யமான ப்ராயச்சித்தமாயும் இருக்கும் ஸ்ரீநிவாஸன் தயையே! ஜ்ஞாதாக்கள் உன்னை ஸம்ஸாரத்தைக் கடப்பிப்பவளாக நிச்சயித்திருக்கின்றார்கள்." எனும் தயாசதக ச்லோகம் தீநர்க்குப் பகவத்கருணை தான் மோக்ஷோபாயம் என்று காட்டுகின்றது. ஆனபடியால்தான் அந்தக் கல்யாணகுண விசிஷ்டனான ஸ்ரீராமன், அதை ரக்ஷிக்கும்பொருட்டு, அஸஹ்யாபராதம் புரிந்தவனும் தன்னிடம் சரணாகதனாகில், அங்கீகரிக்கத் தக்கவனென்று சொன்னார். இப்படி விபீஷண சரணாகதியை வ்யாஜமாக வைத்துக்கொண்டு, ஸர்வேச்வரன், ஸர்வ ஜநங்கட்கும் பரமச்ரேயஸ்ஸை யடையும்படியான உபாயத்தைக் காட்டியருளினன். நமது நாட்டிலுள்ள வைதிக ஸம்ப்ரதாயங்க ளனைத்தும் ஸ்ரீராமனைப் பகவானுடைய பரிபூர்ணாவதாரமென ஒப்புக்கொள்கின்றன. ஸ்ரீமத் ராமாயணத்தினுடைய ப்ராமாண்ய பாவத்தையும் அங்கீகரிக்கின்றன. லோகத்தில் ஸத்புருஷர்கள் சரணாகத த்ராணத்தை நியமேந அநுஷ்டித்தார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளாமல் விடார். ஆகவே, மஹா அபராதிகள் விஷயத்திலும், ஸக்ருத் ப்ரபதந மாத்ரத்தால், பகவான் தயாபரிதனாய், 'அபயப்ரதன் ஆகின்றேன்' என்றும், இதைத்தன் வ்ரதமெனத் தவறுதலின்றி நடத்துவதாயும் சொன்ன வசநத்தை விச்வஸித்து, அந்த உபாயத்தை அநுஷ்டிப்பதைக் குறித்து சங்கிப்பானேன்? அவன் பொய் சொல்வனோ? "அந்ருதம் நோக்தபூர்வம் மே நசவக்ஷ்யே கதாசந, ராமோ த்விர்நாபிபாஷதே, ஸத்யம்

ஜீவிதம் ஜஹ்யாம் ஸ்வாம்வா ஸீதே ஸலக்ஷ்மணாம் । நஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ஶ்ருத்ய ", "பொய் நான் முன் சொன்னதில்லை; எப்போதும் சொல்வேனு மல்லன்", " ராமன் இருமொழி யுரைக்கமாட்டான் " "ஸீதே! என் ப்ராணனை விட்டாலும் விடுவேன், லக்ஷ்மணனுடன் உனையும் விட்டாலும் விடுவேன்; ப்ரதிஜ்ஞையைச் செய்துவிட்டு அதை விடமாட்டேன்", என்றிவ்விதம் அவன் உரைத்திருக்கின்றனனே. " ஶ்ரீநிவாஸஸ்ய ஶரணாகத ரக்ஷிணீம் ", எனும்படியும், " ஶக்யேயம் ஹி தவிதுஜ: மஸ்யஸா ஜநகாத்மஜா ", எனும்படியும், பிராட்டிக்கு நித்ய வாஸஸ்தாநமாயிருக்கும் ஏற்றத்தை யடைந்த பகவான், அவனது தயையே ரூபிகரித்து வந்ததெனச் சொல்லக்கூடிய ஸீதையால், ஶரணாகதவத்ஸல: என்றன்றோ வர்ணிக்கப்பட்டனன். ஆதலால் ஶரணாகதியின் பெருமையை மநுஷ்யலோகத்தில் ஸ்தாபிக்கவென்றே நாராயணன் ராகவனா யவதரித்தனர்.

## ஸ்ரீ க்ருஷ்ணோக்திகள்.

பிறகு தனது ஸர்வேஶ்வரத்வத்தைக் குறையின்றிக் காட்டியருளிய அர்ஜுநன் ரதத்திலே, அவனை வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஜகத்ஹிதத்தை உத்தேஶித்துத் தத்வநிரூபணம் செய்யுங்காலத்திலே, " ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம் " என்று சொல்லிக்கொண்டு ஜ்ஞாநத்தின்பொருட்டுச் சரணமடைந்த அர்ஜுநனை நோக்கி,

மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யேபி ஸ்யு: பாபயோநய: ।
ஸ்த்ரியோ வைஶ்யாஸ் ததா ஶூத்ராஸ் தேபி யாந்தி பராம் கதிம் ॥
கிம் புநர் ப்ராஹ்மணா: புண்யா: பக்தா ராஜர்ஷயஸ் ததா ।

என்றருளிச்செய்தனன். ஜந்மத்தால் பாபிஷ்டர்களும், " ஸ்த்ரீப்ராயம் இதரம் ஜகத் ", என்பதுபோல், க்ரஹவ்யாபாரோசித ப்ரஜ்ஞாஶாலிகளான ஸாதாரண ஸ்த்ரீகளும், கேவல

ஐஹிக விஷயங்களில் வ்யாஸக்த மநஸ்கரான வைச்ய சூத்ரர்களும், பகவத் ஸமாச்ரயண மாத்ரத்தால் பரமச்ரேயஸ்ஸை அடைவார்கள்; ஆதலால் ஜந்மத்தால் புண்யகர்மங்களிலும் பகவத் பக்தியிலும் சிறந்த ப்ராஹ்மணர்களும் க்ஷத்ரியர்களும் பரமாத்மை ஆச்ரயித்து மோக்ஷமடைவர் என்பதைப்பற்றிக் கேட்பானேன் என்பது அதன் பொருள். ஆச்ரயித்த மாத்ரத்தால் பாபிஷ்டர்களும் மோக்ஷ மடைவார்கள் என்பதால், பகவான் இந்த இடத்தில் ப்ரபதநத்தைத் தான் உத்தேசித்திருக்கவேண்டும். பாபம் பகவானிடம் சரணாகதியைத் தடுக்கு மென்னும் விஷயத்தை, "𑌨 𑌮𑌾𑌂 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌨𑍋 𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌾𑌧𑌮𑌾𑌃। 𑌮𑌾𑌯𑌯𑌾𑌪𑌹𑍃𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌾 𑌆𑌸𑍁𑌰𑌂 𑌭𑌾𑌵𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃।" எனும் ச்லோகத்தால் ஸாதித்தருளினர். துஷ்க்ருதிகள் என்றால் பாபத்தொழிலுடன் கூடினவர். இவர் நால்வகைப்பட்டவர்; மூடர் நராதமர், மாயையால் அபஹரிக்கப்பட்ட ஜ்ஞாநத்துடன் கூடினவர், அஸுர ஸ்பாவத்தை யடைந்தவர். மூடர் என்பவர், அஹங்கார மமகாரமெனும் விதைகளால் வளர்ந்த அவித்யா வ்ருக்ஷத்தை என்றும் ஆச்ரயித்தவர். நராதமர் என்போர், பகவத் கதைகளைக் கேட்டுப் பகவத் விஷயத்தில் ஸமுதாய ஜ்ஞாநமடைந்தவரேனும், பகவத் விஷயத்தில் ஆபிமுக்யம் அற்றவர். பகவத் விஷய ஜ்ஞாநத்தை ஸம்பாதித்த பிறகும் யுக்திவாதங்கள் செய்துகொண்டு, அதன் ப்ரயோஜநத்தை அடையாமல் பகவந்மாயைக்குள் அகப்பட்டுக்கொண்டு ஸம்ஸரிக்கின்றவர் மாயையால் அபஹ்ருதமான ஜ்ஞாநஸஹிதர். ஜ்ஞாந மிருந்தாலும் இல்லாவிட்டாலும், சரீரமே ஆத்மாவென நினைத்தவரெனச் சரீர போஷணத்திலேயே ப்ரவ்ருத்தராய், நைஸர்கிகமாகப் பகவத்த்வேஷத்தைக்கொண்டாடுகின்றவர் அஸுர ஸ்வபாவத்தை அடைந்தவர். இவர்கள் பகவத் ப்ரபத்தி செய்கின்றாரில்லை என்பது மேலெடுத்த ச்லோகத்தின் தாத்பர்யம். ஈச்வரனாகிய தன்னை ஸர்வப்ரகாரத்தாலும் சரணமடையும்படி ஸ்ரீ க்ருஷ்ணன், அர்ஜுநனுக்கு ஸாக்ஷாத்தாக விதித்தனர். அதன் பலனாக ஈச்வரப்ர

ஸாதமும், தத்ப்ரஸாத பலனாக பரமசாந்திரூபமான மோக்ஷமும் கிடைக்குமென்று, "தமேவ ஶரணம் கச்ச" எனும் ஶ்லோகத்தால் ஸாதித்தருளினர். இதர உபாயங்களை ஸம்யக் பரித்யாகம்செய்து, தன்னையே ஶரணமடையும்படி மறுபடியும் விதித்து, அந்த ஶரணாகதிபலன் தனது ப்ரஸாதத்வாரா ஸர்வபாபக்ஷய மென்றும், கண்டோக்தியாகச் சரமஶ்லோகத்தினால் வெளியிட்டனர். கீதா ஶாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டது அங்கப்ரபத்தி யானபோதிலும், உத்தேஶித்த ப்ரயோஜநத்தைத் தரவல்ல பகவானுடைய க்ருபையானது, ப்ரபதநம் செய்தவனுக்கு உபாஸந நிஷ்பத்தியை உண்டாக்குவதுபோல், பகவானுடைய பரமஸ்தாநத்தையும் கொடுக்க வல்லது. இந்த அர்த்தம், "தமேவ ஶரணம் கச்ச" எனும் ஶ்லோகத்தின் ஶப்தங்களின் அர்த்தயோசனையால் த்ருடமாக ஏற்படும். "ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம்", எனும் சப்தங்களும் அந்த அர்த்தத்தைத்தான் ஊர்ஜிதப்படுத்துகின்றன.

'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா।
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே'॥

"த்ரிகுண ஸ்வரூபையானவளும், ஈஶ்வரனாகிய என்னை யாஶ்ரயித்தவளுமான இந்த விஷ்ணுமாயையானவள் யாவராலும் அதிக்ரமிக்கப் படாதவள். என்னையே யார் சரணமடைகின்றனரோ, அவர்தாம் இந்த மாயையைத் தாண்டுகின்றனர்" என்கிற ஶ்லோகமும் பகவத்ப்ரபதந மொன்றினாலேயே மாயாதரண பலனான பகவத்ஸாயுஜ்யத்தை யடையக்கூடும் எனக் காட்டுகின்றது. ஆகவே கீதையில் பல ஶ்லோகங்களால் பகவான் ப்ரபதந மொன்றினாலேயே, யாவரும், அநிஷ்டநிவ்ருத்தி ரூபமாயும், இஷ்டப்ராப்திரூபமாயும் வ்யவஹரிக்கப்பட்ட மோக்ஷத்தை அடையக் கூடுமென்பதை, ஸ்வயமே காட்டியும் விதித்துமருளினன்.

(இன்னும் வரும்.)

பத்ராதிபர்.

# ஜநகநந்திநீ.

திருவஷ்டாக்ஷர த்யாநப்லோகத்தின் அர்த்தத்தை ஹ்ருதய கமலத்தில் ஸாக்ஷாத்கரிக்க அசக்தரான பல முமுக்ஷுக்களிடம் க்ருபை கொண்டு, பேரருளாளன், அந்த ப்லோகார்த்தம் மூர்த்தீ கரித்ததென, நாலாம் திருநாள் காலை உத்ஸவத்தில் ஸேவை ஸாதிக்கின்றான். நித்யவிபூதியிலன்றி அந்தஸேவை அவ்வண்ணமே அந்யத்ர இவ்வுலகில் கிடைப்பதரிது. அதற்குக் காரணம், முமுக்ஷுக்களும், க்ருதக்ருத்யர்களும், அந்தத் திவ்யதேசத்தை யொத்து, அந்ய ஸ்தலங்களில் அவ்வளவாகக் கூடுதலில்லை. ஆனாலும், நித்ய ஸூரிகள் தர்சிக்கத் தகுந்த தனது ரூபத்தை ஸர்வ பாமரர்களும் தர்சிக்கத் தகாது எனும் திருவுள்ளத்தால் தானே, அர்ச்சகர்களுக்குக் கஷ்டம் கொடாமல், அந்தத் திவ்யரூபத்தைத் தரிக்கின்றானில்லையோ? தன் பரம்பாவத்தை அறியாத பூஜகர்கள், தமக்கு ப்ராயேண ஒரு பலத்தையும் கருதாமலும், அடையாமலும், பரர் தங்களை மெச்சவேண்டுமென்று செய்யும் ப்ரயத்நத்தை உகந்தருளானானாலும், அவர்கள் ப்ரமப்படுகின்றாரென க்ருபாவசனாகித் தாமஸித்து அந்த ஸேவையை அங்கீகரிக்கின்றானோ? அந்த விஷயம் மந்தமதிகளான எமக்கு வெளிப்பட்டிலது. எவ்விதமாயோ, பேஷவாஹநத்தில் பெருமாள் எழுந்தருளத் தாமஸிக்கவே, வரதாசார்யரும் அவர் பார்யையும், கேசவாசார்யர் நிவாஸத்துக்குச் சென்றார்கள்.

நடையில் உட்கார்ந்து புஸ்தகம் பார்த்துக்கொண்டிருந்த கேசவாசார்யர், வரதாசார்யரைக் கண்டவுடன், "எழுந்தளவேண்டும்", என்று சொல்லிக்கொண்டு எழுந்துவிட்டார். உடனே தம்முடைய ஸஹோதரியையும் பார்த்து, "அம்மா! வா, எது ஸபத்

நீகராய் எழுந்தருளியது? ஏதோ விசேஷம் இருக்கவேண்டு மென்று ஊகிக்கின்றேன். என்ன திருவுள்ளம்?'' என்று மொழிந் தார்.

''விசேஷமிருக்கின்றது. வெளியிடவும் கஷ்டமா யிருக்கின் றது. அவள் சொல்லுவள், திருச்செவி சாற்றவும்'' என்றனர் வர தாசார்யர்.

''கநகவல்லி! உன் பர்த்தா ஆஜ்ஞாபிக்கின்றார். எந்த அபிப் ராயத்தால் வந்தனை?'' என்றனர் கேசவாசார்யர்.

''என்ன வென்று சொல்லுவேன்? நேற்று அஸ்தமந ஸம யத்தில் ஸ்ரீநிவாஸன் என்னிடம் வந்தான். தான் விவாஹம் செய்து கொள்ளும் பக்ஷத்தில், ஜநகநந்தினியைத் தவிர்த்து மற் றொரு பெண்ணையும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேனெ ன்று என்னுடன் சொல்லிவிட்டுப் போய்விட்டான். ராத்ரி உங் கள் ஜாமாதாவுடன் அதை விஜ்ஞாபித்தேன். அவர் ஆஜ்ஞாபித்த படி அவருடன் இவ்விடம் வந்திருக்கின்றேன்'' என்று கநக வல்லி சொன்னாள்.

உடனே வரதாசார்யரும், ''இன்று காலை அடியேன் பை யனைப் பார்த்து வார்த்தை சொன்னேன். அவன் அந்த விஷயத் தில் ஒரே பிடிவாதமாக இருக்கின்றான். அவன் க்ஷேமம் தேவரீ ரையும் பொறுத்ததன்றோ? ஆதலால் அதைத் தேவரீருடன் ப்ர ஸ்தாபிக்க வேண்டுமென்று வந்திருக்கின்றோம்'' என்று சொன் னார்.

''ப்ரஸ்தாபிக்க வெண்ணிய விஷயத்தின் யுக்தாயுக்த விசாரம் செய்ததா?'' என்றார் கேசவாசார்யர்.

''செய்துதான் இவ்விடம் வந்தோம். பையன் நிச்சயத்தை ஸம்சயமின்றி அறிந்த பிறகு, அவன் க்ஷேமத்தை உத்தேசிப்ப தன்றோ யுக்தம்? அவன் இஷ்டத்தை நாங்கள் நிறைவேற்றாவிட் டால், அவனுக்கு க்ஷேமம் உண்டாகாது. ஆதலால் அந்த விஷ யத்தில் தேவரீரும் அநுகூல யோசனையைப் பண்ணவேண்டு

மென்பது அடியேனுடைய ப்ரார்த்தனே" என்று சொன்னுர் வரதாசார்யர்.

"பந்துப்ரியர், பந்துக்கள் இஷ்டத்தைச் செய்யவேண்டியதே. தர்மத்தைக் காப்பாற்ற எண்ணுபவர், அக்ருத்யகரணத்தையும் ஆசரிக்கக் கூடாது. ஶாஸ்த்ரம் நிஷேதிக்கும் ஸம்பந்தத்தை எவ்விதம் நான் அங்கீகரிக்கக் கூடும்?" என்று சொன்னுர் கேசவாசார்யர்.

"தக்ஷிண தேசத்தில் இப்படிப்பட்ட ஸம்பந்தங்கள் அநுஷ்டாநத்தில் வந்துகொண்டிருக்கின்றனவே" என்றனர் வரதாசார்யர்.

"அபிஜாதர்க்குள் ஶிஷ்டாசாரத்தை மதிப்பவர் இப்படி எங்கேயாவது ஸம்பந்தம் செய்துகொண்டதைத் தேவரீர் காட்டக்கூடுமோ? அப்படி யடியேன் செய்துவிட்டால் அடியேனுக்கு க்யாதி விரோதம் வாராதோ? "ஸபசு வ்ரோணம் கூடாடமதெ ஜொகஷு உநவதமூதெ" எனும் பகவத் வசநத்தை மறந்ததோ?" என்றனர் கேசவாசார்யர்.

"ஆனுல் அடியேனுக்கு என்ன கதி?" என்ருர் வரதாசார்யர்.

"யச்ரா நுவ்ருத்தவ்யம்" என்று ஶ்ருதி சொன்னபடியால் ஶிஷ்டாசாரமெனப்பட்ட தர்மத்தை அடியேன் த்யஜிக்கமாட்டேன். ஹிதவசநத்தால் ஶ்ரீநிவாஸன் புத்தியை மாற்றவேண்டும். அந்த ப்ரயத்நத்தைத் தேவரீர் வஹிக்கவேண்டும். அடியேனும் அவனைப் பார்த்தால் சொல்லுகின்றேன்' என்று சொன்னுர் கேசவாசார்யர்.

"அடியேன் அந்த ப்ரயத்நத்தைச் செய்தேன். அது பயன்பட வில்லை. தேவரீர் ப்ரயத்நத்தின் ப்ரயோஜநத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அடியேன் இவ்வண்ணம் தேவரீரிடம் வந்ததை க்ஷமிக்க ப்ரார்த்திக்கிறேன்" என்று சொல்லி எழுந்து விட்டார் வரதாசார்யர். உடனே அவரும் அவர் பத்நீயும் ஸ்வக்ரஹம் சென்றனர்.

உள்ளே யிருந்த ஹரிப்ரியையும் ஜநகநந்திநியும், அவஶமாய் அந்த ஸம்பாஷணையைக் கேட்டார்கள். அவர்கள் இருவரும் கேச வாசார்யரைக் குறித்து மிகவும் பரதந்த்ரர்கள். அந்தப் பாரதந்த்ர் யம் அவர்க்கு அத்யந்தம் இஷ்டமாயிருந்தபடியால், ப்ரஸ்தாப விவாஹ விஷயத்தில் அவர் ஸரியாக நடப்பர் எனும் விஶ்வாஸம் அவர்க்குள் த்ருடமாய் நிலைத்திருந்தது. ஸ்ரீநிவாஸன் தன்னைப் பார்யார்த்தம் அபேக்ஷிக்கின்றான் எனும் விஷயம் அன்று தான் ஜநகநந்திநிக்குத் தெரியும். முதல்நாள் ஸாயங்காலம் அவன் தன் னுடன் ஸம்பாஷிக்கையில், முடிவாகச் சொன்ன சொற்களின் தாத் பர்யத்தை ஜநகநந்திநி கிஞ்சித் யோசித்தாள். பகுநாள் பழக்கத் தால் ஸ்ரீநிவாஸனிடம் அவளுக்கு அபிப்ராயமும், ஓர் உத்தேசத் தைக் குறிக்காமல், அநுகூலமாகவே யிருந்தது. ஆனால் அவனுக் கும் தனக்கும் விவாஹத்தைச் சாஸ்த்ரம் ஸம்மதிக்கமாட்டாது என்பதையும் யோசித்தாள். தன்னுடைய பிதா தனக்குப் பதியாக யாரை வரித்தபோதிலும், அந்தப் புருஷன் தான் தனக்கேற்ற புருஷனாகத் தக்கவன் என்றும் நிச்சயம் செய்தனள். ஆனால் பிதாவின் நிச்சயத்திற்குத் தான் ஸ்ரீநிவாஸனைப்பற்றி யவருடன் சொன்ன சொற்கள் எம்மட்டும் ஸஹாயம் செய்தனவோ என் பதை எண்ணினாளில்லை.

இதற்குள் பெருமாள் ஸந்நிதி வீதியில் எழுந்தருளும் வேளை கிட்டியது. கேசவாசார்யர் வரதாசார்யர் முதலானவர்கள் கைங் கர்யார்த்தம் ஸந்நிதிக்குப் போய்விட்டார்கள். ஜநகநந்திநியும் ஹஸ்திகிரீசனுடைய வீதி ஶோதந கைங்கர்யத்தை ஶ்ரத்தை யுடன் முடித்தனள். முன் விவரித்தவண்ணம் உத்ஸவ விபவத் தைத் தர்ஶித்து ஆநந்தம் கொண்டனள். வைகுண்டநாதன் அவன் தான், ஜத்காரணன் அவன்தான், முக்திப்ரதன் அவன்தான் என்று ஸர்வ ஸம்ஶயங்களும் அறுத்தொழிந்தவண்ணம் தேவாதிராஜன் ஸேவை ஸாதிக்க, ஆஸ்திகர் யார்தான் கண்ணாரக் கண்டு உகக் காது நிற்பர்? ஸத்ஸங்கத்தின் பலத்தைப் பூர்ணமாய் அடைந்து அநுபவித்த நம் கதாநாயகி, புளகாங்கிதையாய் எம்பெருமான்

III

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ பாஷ்யம் மூன்ருவது அத்யாயம், நாலாவது பாதத்தில், விதுராதீ கரணத்தில், ‘அந்தரா சாபி து தத்³ருஷ்டே:’ என்கிற ஸூத்ரபாஷ்யத்தில், அநாஶ்ரமிகளுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் உண்டா இல்லையாவென்று உபக்ரமித்து, அநாஶ்ரமிகளுக்கு ஆஶ்ரமாங்க தர்மாநுஷ்டாநமில்லையாகையாலும், ப்ரஹ்மவித்யை கர்மயோகத்தை அங்கமாக உடையதாகையாலும், அநாஶ்ரமிகளுக்கு ப்ரஹ்மவித்யை அஸம்பாவிதமென்று பூர்வபக்ஷம் பண்ணிக்கொண்டு, “ரைக்வ வாசக்நவீ ஸம்வர்த்த ப்ரப்ருதீநாம் அநாஶ்ரமிணாமபி ப்ரஹ்மவித்யாநிஷ்டத்வம்”, இத்யாதி வாக்யங்களினல், இவர்களுக்கும் ப்ரஹ்மவித்யை உண்டென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதிகரணஸாராவளியிலும், ‘பீஷ்மாதௌ த்ருஷ்டேச’ என்றிருக்கிறது. ரங்கராமாநுஜ ஸ்வாமி அநுக்ரஹித்த ஶ்ருதப்ரகாஶிகா வ்யாக்யாநமான பாவப்ரகாஶிகையில், அக்நீந்தநாத்யதிகரணத்தில் “பீஷ்மஸ்ய து பித்ருப்ரஸாதலப்தஸ்யாபி தாரவிரஹே நிவ்ருத்தவிவ விதுரஸ்ய த்ருப்யாம் ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞா ஸந்தோராத் த்வநாஶ்நிவ்ருத்தஸத்யம் தாராணாம் பித்ராய ஸாக்ஷாத் வஸிஷ்டாதி தேந யஜ்ஞாத்யநுஷ்டாநம்”. என்றிருக்கிறது. மேற்படி க்ரந்தத்தினுல் ஸ்ரீ பீஷ்மருக்குப் பத்நீ இருந்ததாகவும், அவர் யாகம் செய்ததாகவும் ஏற்படுகிறபடியால், பீஷ்மர் அநாஶ்ரமி என்கிற ஸ்ரீ பாஷ்ய அதிகரணஸாராவளி க்ரந்தங்களுக்கும், பாவப்ரகாஶிகைக்கும் விரோதம் இருக்கிறதுபோல், அடியேனைப்போன்ற மிதப்ரஜ்ஞர்களுக்குத் தோன்றுகிறபடியினுல், இந்த ஸம்ஶயத்தை ஜ்ஞாதாக்களான ஆஸ்திகர்கள் பரிஹரிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். ஆனுல், ஸ்ரீ பீஷ்மர் ஸ்நாதகராயிருந்த காலத்தை உத்தேசித்து, ஸ்ரீ பாஷ்ய தேசிக திவ்யஸூக்திகள் பிறந்தனவென்றும், விவாஹிதரான பிறகு ஊர்த்வரேதஸ்த்வ ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டாரென்றும், பிறகு யாகாதிகளைப் பண்ணினுரென்றும் க்ரந்த விரோதத்தைப் பரிஹரிக்கலாமோ வென்ருலும், அது, அவருடைய ப்ராதாவான விசித்ரவீர்யனுடைய மரணநந்தரம் வம்ஶவ்ருத்திக்காக நீர் விவாஹம் பண்ணிக்கொள்ளுமென்று ஸத்யவதி சொன்னதாக இருக்கும் பாரத வாக்யத்தோடு விரோதிக்கு மாகையால், உசிதமன்று. முன் க்ருததாரராய்ப் பிறகு தாரவியோகமடைந்து இருந்த பீஷ்மரை விவாஹம் பண்ணிக்கொள்ளச் சொன்னுள் என்பதற்கு உசிதப்ரமாணம் அடியேனுக்குத் தெரியவில்லை.

ஆடி மாஸம் 10௳ }
புத்தன்கோட்டகம். }

ஸ்ரீநிவாஸாயங்கார்.

## IV

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஂஹ பரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு :—

ஸ்ரீ அழகியசிங்கர் திருநாட்டுக்கு எழுந்தருளின விஷயத்தைப் பற்றியும், திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதி ஸ்கீம் விஷயத்தைப் பற்றியும் அஹோபிலம் மடம் உயில் கேஸ் விஷயமாகவும், மேற்படி ஸபா கார்ய தர்சியவர்களால் ப்ரசுரம் செய்யப்பட்டதைப் பார்த்தேன்.

ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ ஶடகோபமஹாதேசிகன், ஸ்ரீ ஶடகோபராமாநுஜ மஹாதேசிகன், இந்த ஸ்வாமிகள் காலத்தில், நடந்தபடிப் பின்னிட்டு ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு க்ரந்த காலக்ஷேபம் பண்ண ஸரியான ஆநுகூல்யம் இல்லாதபடியால் அவரவர்கள் இஷ்டப்ரகாரம் இதர ஸ்வாமிகளிடத்தில் ஆஶ்ரயித்து, ஸந்நிதி அந்வயமில்லாமல் விலகிப்போவதைப் பற்றி மிகவும் சோகிக்கவேண்டியிருக்கின்றது. மேலும் ஸந்நிதியில் சில ஸ்வாமிகள் முதலே ஸஞ்சாரம் எழுந்தருளாமல், ஸ்வதேசங்களில் இருந்துகொண்டு தூரதேச ஸம்ப்ரதாயஸ்தர்களை அநாதரவு பண்ணிவிட்டபடியால் ஸந்நிதியினுடைய ஶிஷ்யஸம்பத்தும் குறைவுபட்டது.

அடியேன் கொஞ்சகாலத்திற்கு முன் ஸ்ரீ அஹோபிலம் திவ்யதேச யாத்ரையாய்ப் போயிருந்தேன். மலையின்மேல் ஸந்நிதியில் ஆராதநமே யில்லாமல் ப்ரஹ்மோத்ஸவம் முடிந்தவுடன் திருக்காப்பைச் சாத்தியிருந்தது. ஸந்நிதியை ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு கீழ் அஹோபிலம் வந்து சேர்ந்தேன். அவ்விடத்திலிருந்த பூஜகரை விசாரித்ததில், அவர், ப்ரஹ்மோத்ஸவாநந்தரம் ஒரு பக்ஷம் வரையில் ஸந்நிதியின் திருக்காப்பை நீக்குகின்ற வழக்கம் இல்லையென்றும், அப்போது ப்ரஹ்மாதி தேவர்கள் பெருமாளுக்கு ஆராதநம் செய்கின்றார்கள் என்றும் சொன்னார். நம்முடைய தேசங்களில் ப்ரஹ்மோத்ஸம் முடிந்தவுடன் நடக்கின்ற விடாயாற்றி உத்ஸவ ஸ்நாநத்தில் ஸ்ரீமத் அஹோபிலத்தில் திருக்காப்பைச் சாத்திவைப்பது வழக்கமெனும் தப்பு ஸமாதாநத்தைக் கேட்டு எனக்கு மனம் கலங்கிநின்றது. இப்போது புது அழகியசிங்கர் ஆஸ்தாநத்துக்கு எழுந்தருளியிருக்கிறார். வடதேசங்களில் லக்ஷாதிகாரிகளான அநேக ரெட்டிமார்களும், ராஜாக்களும், ஸ்ரீ வைஷ்ணவ சிஷ்யர்களும் பஞ்சஸம்ஸ்கார மில்லாமல் வருத்தப்படுவதாக நேரில் தெரிந்துகொண்டேன். அநேக க்ராமங்களில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மனுக்குச் சொந்தமான பூமிகள் அந்யாக்ராந்தமாய்ப் பராதீநமாய் விட்டதாகக் கேள்விப்படுகிறேன். கர்நூல் ஜில்லா கோயில் குண்ட்லா தாலூகா ஒய்யாலவாடா க்ராமத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மனுக்குச் சொந்தமான ஏறக்

குறைய 25 ஏகர் இனும் நிலங்கள், முன்காலத்தில் ராஜாக்களால் ஸ்வாமிக்கு நித்யப்படி தீப அகண்டத்திற்காக விடப்பட்டு, இனும் டைடில்டீட்டில் அந்த விஷயம் காணப்பட்டும் இருக்கிறது. அதைப் பார்த்து நான் மிகவும் வ்யஸநத்தை யடைந்து அந்த க்ராமத்துக்குப் போனேன். அங்கே முனுசீபு கர்ணம் இவர்களை விசாரித்ததில், அந்தப் பூமிகள் ஒரு பூஜாரி ஸ்வாதீநத்தி லிருப்பதாயும், அவற்றின் வரும்படிகளில் காஸமேகம் ஸ்வாமிக்குச் சேருகின்றதில்லை யென்றும் தெரியவந்தது. இதே ரீதியாய் இன்னும் பல க்ராமங்களிலும் ஸ்வாமிக்குப் பாத்யப்பட்ட இனும் பூமிகள் பராதீநமாய்ப் போய்விட்டன. சிஷ்யஸம்பத்தும், உபபத்யாதிக்யமும் தான் ஸ்ரீ அஹோபிலமடத்துக்கு க்யாதியை உண்டுபண்ணின. இவற்றுள் சிஷ்ய ஸம்பத்து நாளடைவில் குறைவுபட்டது. ஸொத்துக்கள் ஸரியாகப் பாதுகாக்கப்படாமல் அவையும் மடத்துக்குக் குறைந்துகொண்டு வருகின்றன. இதற்கு முக்ய காரணம், வைதிகத்திலும் லௌகிகத்திலும் விசேஷ ஸாமர்த்யம் உள்ள பெரியமநுஷ்யர்களைத் தக்க சம்பளம் கொடுத்தாவது மடத்து ஏஜெண்டாக ஏற்படுத்தாதது தான். இப்போதாவது தகுந்த ஏஜெண்டுகளை நியமித்து, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்வாமிக்குச் சொந்தமா யிருக்கிற ஸகல ஸொத்துக்களுக்கும், அந்தந்த க்ராம ரிஜஸ்டர்களைப் பார்த்துக் குறிப்பெடுத்து, ஒரு ஜாப்தா தயார் செய்துகொண்டு, மேற்படி ஸொத்துக்களை ஸ்வாதீநப்படுத்திக்கொள்ள ஆஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கும் புது அழகியசிங்கர் ஸரியான ஏற்பாடு செய்வர் என்று ப்ரார்த்திக்கிறேன்.

கர்நூல் ஜில்லா கலெக்டர் துரையவர்கள் ஸ்ரீமதஹோபிலம் தேவஸ்தாநம் சீர்திருத்தல் விஷயமாய் மிகுந்த ஶ்ரத்தை எடுத்துக்கொண்டு நேரில் போய்ப் பார்த்து, இஞ்சினீர் இலாகா மூலமாக அவஶ்யம் செய்யவேண்டிய மராமத்து வேலைகளைப்பற்றி மதிப்புச்சீட்டு தயார்செய்ய உத்தரவு செய்திருக்கிறதாகவும், அதன் மொத்த தொகையை அழகியசிங்கர் ஸர்க்கார் ஸ்வாதீநத்தில் வைத்து வேலை நடத்தவேண்டிய தென்றும், அப்படிச் செய்யத் தவறினால் தேவஸ்தாநம் இனும் வகைராக்களை மாற்றிவிடுவதாக அழகிய சிங்கருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறதாகவும் கேள்விப்பட்டேன். இதற்கு முக்ய காரணம், நம்முடைய சிஷ்யஸபையார் சென்ற ஸம்வத்ஸரம் அஹோபிலத்தில் சேர்ந்து நடத்திய மஹாஸங்கத்தின் ப்ரயத்நமென்று எண்ணுகிறேன். அந்த ப்ரயத்நமன்றி இது நடந்திராது. இப்போது புது அழகிய சிங்கர், கர்நூல் கடப்பை ஜில்லாக்களில் ஒரு ஸம்வத்ஸரகாலம் ஸஞ்சாரம் பண்ணினால், மேற்படி ஸந்நிதி மராமத்துக்காக இரண்டு மூன்று லக்ஷம்

ரூபாய் அதிக ஸுலபமாகச் சேகரிக்கக்கூடும். அதைக்கொண்டு அந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்யலாம். சென்ற ஸம்வத்ஸரம் மடத்து ஏஜெண்டு ஈ. குப்புஸாமி அய்யங்கார் மேற்படி தேவஸ்தாந விஷயமாகப் போட்ட ஜீர்ணோத்தாரண நோட்டீஸ்படி, ஸரியான ப்ரயத்நம் செய்யாமல் விட்டு விட்டபடியால், இப்போது ஸர்க்கார் த்வாரா மராமத்துகள் நடத்தும்படி ஏற்பட்டது. அந்த கர்நூல் ஜில்லா வாஸிகளான அநேக ப்ரபுக்கள் திருவெவ்வுளூர் வீரராகவன் ஸந்நிதிக்கு ஏற்பட்ட ஸ்கீம் மாதிரியாக, அஹோபிலம் ஸந்நிதிக்கும் ஒரு ஸ்கீம் எற்படவேண்டிய ப்ரயத்நங்களை யோசிக்கின்றதாகக் கேள்விப்படுகின்றேன். முன் அழகியசிங்கர் காலத்தில், அவர் அநேக வ்யவஹாரங்களுக்கு இடங்கொடுத்த மாதிரி, இப்போதிய அழகியசிங்கர் இடங்கொடாமல், அஹோபிலம் தேவஸ்தாநம் ப்ரஹ்ம உத்ஸவத்தில் வரும் குத்தகைத் தொகைகளை ஸ்வாமியினுடைய நித்ய ஆராதநத்துக்கு உபயோகப்படுத்தும்படி ப்ரார்த்திக்கிறேன்.

திருவெவ்வுளூர் தேவஸ்தாநம் ஸ்கீம் வ்யாஜ்யம் ஒருவாறாக முடிந்தது. அப்படி முடியாமலும், வாதிகள் அதற்கு ஒப்புக்கொள்ளாமலும் வ்யவஹாரம் விசாரணைக்கு வந்திருந்தால், மேற்படி தேவஸ்தாநம் தர்மகர்த்தாக்களும், அவர்களது ஏஜண்டுகளும், அஜாக்ரதையினாலும், தெரிந்தும், மேற்படி ஸந்நிதிக்கு உண்டாக்கிய ஏராளமான நஷ்டங்கள் ஸர்க்கார் த்வாரா மேற்படி தேவஸ்தாநத்துக்கு மடத்தினின்று வஸூலிக்க நேரிட்டிருக்கும். இப்படி நேரிட்ட நஷ்டங்களுக்குக் காரணம், அழகியசிங்கர்கள் தங்களுடைய பூர்வாஶ்ரம ஸம்பந்திகளை அந்தப் பெரிய தேவஸ்தாநம் விசாரணைக்கு நியமித்ததும், அவர்கள் மேல் தாங்கள் யாதொரு மேல்விசாரணை செய்யாமல் இருந்ததும் தான். முன் அழகியசிங்கரால் தம்முடைய பூர்வாஶ்ரம மாப்பிள்ளை, காளி வீரராகவய்யங்கார் என்பவர், மேற்படி தேவஸ்தாநம் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டனர். அவர் இறந்துபோகையில், அவர் வைத்திருந்த கணக்குப்படி, தேவஸ்தாந சிட்டாவில் கையிருப்பாகக் காட்டிய தொகை ஸுமார் ரூபாய் ஆயிரம். அதன் பிறகு தேவஸ்தாநத்தை ஒப்புக்கொண்ட மடத்து ஏஜெண்டு, அந்தத் தொகையை அது முதல் ஒரு வருஷமாகியும், நாளது வரையில் தேவஸ்தாநத்துக்குச் செலுத்தவில்லை. மேற்படி தேவஸ்தாநம் ஶ்ரோத்ரியம் புங்கத்தூர் க்ராமத்தில் நாளது வருஷம் புதியதாய் விதிக்கப்பட்ட இரண்டாம்போகம் தண்ணீர்தீர்வையை நிவர்த்தித்துக்கொள்ள ஸரியான ப்ரயத்நமும் அவர் செய்யவில்லை. மேற்படி தேவஸ்தாநத்துக்குச் சொந்தமான ஸந்நிதிவீதி முதலான புறம்போக்கு ஸ்தலங்களைப்பற்றி வேண்டிய வ்யவஹாரமும் அவர் நடத்தாமல், அதைப்பற்றிக் கோர்ட்டிலிருந்த கேஸை

யும தள்ளிக்கொண்டுவிட்டார். முன் ஏஜெண்டு தேவஸ்தாநத்தின் அநேக கைங்கர்யங்களை நீண்டகாலம் பூர்த்திசெய்யாமல் குறைவாய்விட்டார். அவை அப்படியே இருக்கின்றன. பூஸ்திதிகளாலும், அமாவாஸ்யைகளிலும் தேவஸ்தாநத்துக்கு வரும்படிகள் விசேஷமாக வருகின்றன. அப்படியிருக்க, இந்த ஏஜெண்டுகள் தேவஸ்தாநத்துக்கு எப்போதும் 'கடன் கடன்' என்று முறையிடுகின்றார்கள். இந்த விஷயங்களைப்பற்றி இப்போது இருக்கும் அழகிய சிங்கராவது பராமர்ஶித்து அவற்றைச் சீர்திருத்தவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

முன் திருக்குடந்தை அழகியசிங்கர் காலத்தில், யாதொரு சம்பளமில்லாமல், கைங்கர்யமே ப்ரதாநமென்று, ஏஜெண்டு ஸ்தாநத்தை வகித்த ஹைகோர்ட்டுவக்கீல் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸந்நிதி வரும்படிகளினின்று மிகுதி செய்து, அதற்கு ஸ்திரமான ஆஸ்திகளை ஸம்பாதித்து வைத்தார். அப்படிச் செய்தால் தான் தேவஸ்தாந கார்யம் ஸரியாக நடக்கும். ஜநங்களுக்கு வரவா பக்தி ஶ்ரத்தை குறைகின்றன. ஆதலால் கேவலம் அமாவாஸ்யை வரும்படியை நம்பக்கூடாது. பூஸ்திதியை வ்ருத்திபண்ணினால் தான் தேவஸ்தாநத்துக்குப் பயமில்லை. தேவஸ்தாந விசாரணையைத் தக்கபடி நிர்வஹிக்கத் திறமற்றவரை ஏஜெண்டுகளாய் ஏற்படுத்துவதும், அவர்களுக்குத் தேவஸ்தாந த்ரவ்யத்தினின்று சம்பளம் கொடுக்கிறதெனும் புது வழக்கமும், இவ்விதமாய்த் தேவஸ்தாநத்துக்குப் பல நஷ்டங்களை உண்டுபண்ணுகிறதும், இந்த ஆஸ்திகனுக்கு மிகவும் க்லேசத்தை உண்டுபண்ணுகின்றன. இவற்றை நிவர்த்திக்க எந்த மஹான் ஏற்படுவேனோ வென்று ஸ்ரீ வீரராகவனை அநவரதம் ப்ரார்த்திக்கிறேன்.

மேற்படி ஸ்கீம் வ்யாஜ்யத்தில் வாதிகள் இரண்டு ஸந்நிதி சிஷ்யர்களை ஏஜெண்டுடன் திருவாபரண சாவிகள் முதலானவற்றை வைத்துக்கொள்ளும்படி கோர்ட்டார் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, மடத்து ஏஜெண்டு குப்புஸாமி அய்யங்கார் அதிக ஶ்ரமப்பட்டு அந்தத் தொழிலுக்கு எந்த மதஸ்தரையாவது ஏற்பாடு செய்யலாமென்று ஸ்டேட்மெண்டு கொடுத்து அதே மாதிரியாகக் கோர்ட்டில் எந்த ஹிந்துவாவது நியமிக்கப்படலாம் என்று தீர்மானம் ஆயிற்று.

உயில் கேஸைப்பற்றிப் போன ஸம்வத்ஸரம் வேதாந்த தீபிகையில், பிராது வகைராக்கள் அச்சிடப்பட்டு எல்லா சிஷ்யர்களும் பார்க்க அநுகூலமாயிருந்தது. சிஷ்யர் என்பவரிடத்தில் வாதிகள் எதிர்பார்த்தபடி ஸஹாயம் பெறாமல் போனது சோகிக்கத்தக்கதே. ஆகிலும் எந்த நிபந்தனைகள் பேரில் இந்த வ்யாஜ்யம் உத்ட்ரா (Withdraw) செய்யப்பட்டதோ அவற்றை எல்லா சிஷ்யர்களும் தெரிந்துகொள்ளும்படித் தெரிவிக்கவேண்டுமென்று ஸபா கார்யதர்சியை ப்ரார்த்திக்கிறேன்.

கிரு ஹவாஸி நிமலாந்த தாஸந.

## V

ஐரோப்பா யுத்தம் - 1915 - வருஷம் ஆகஸ்டு மாஸம் 4 - ம் தேதி நம்முடைய ராஜாங்கத்தார் ஜர்மனி தேசத்து ராஜாங்கத்தாருடன் யுத்தத்திற் காரம்பித்து ஒரு வருஷம் முடிவாகின்றது. அன்றையதினம் பூமியெங்கும் மிகவும் விஸ்தரித்த ப்ரிடிஷ் ராஜ்யத்தின் பல பிரிவுகளிலும் பட்டணங்கள் தோறும் ப்ரஜைகள் கூடி, நம்முடைய ராஜாங்கத்தவர் தர்மரக்ஷணத்தின் பொருட்டு ஆரம்பித்த யுத்தமானது அவர்க்கு ஜெயத்துடன் முடிவு பெறும் வரையில், அவர் அதை விடாமல் நடத்தவேண்டுமென்று தீர்மாநம் அளித்தார்கள்.

நாற்பத்தைந்து வருஷங்களுக்கு முன் ப்ரஷ்ஷியா தேசத்துக்கும், அக்காலம் ஸேனையில் பலத்ததென்று யாவரும் எண்ணிய ப்ராஞ்சு தேசத்துக்கும் யுத்தம் நடந்தது. அப்போது யுத்த ஸந்நாஹத்தில் சிறந்த ப்ரஷ்ஷியா தேசமானது, ஸந்நாஹமற்றிருந்த ப்ராஞ்சு தேசத்தை எளிதில் தோல்வி படைவித்தது. அக்காலம்தான் ஜர்மனியானது ஐக்யப்பட்டு, ப்ரஷ்ஷியாவின் ராஜாவான முதலாவது வில்லியம் என்பவர் ஜர்மனி சக்ரவர்த்தியாக ஏற்பட்டார். அவருடைய பௌத்ரன் தத்கால ஜர்மன் சக்ரவர்த்தி.

ஜர்மனி தேசத்தவர்கள் அவருடைய ராஜாங்கத்தவர்க்கு ஐக்யப்பட்டுப் பலவருஷங்களாக ப்ரக்ருத யுத்தத்திற்கு ப்ரயத்நம் செய்து கொண்டிருந்தனர். அதற்குத் தக்க காலம் ஸம்பவித்ததென்றும், அதில் தமக்கு ஜெயம் நிச்சயமென்றும், த்ருடமான எண்ணம் உதித்த பின்பு தான் ஜர்மானியர் இந்த யுத்தத்தைத் தொடங்கினார்கள். பெல்ஜியம் தேசத்தைக் காரணமின்றிப் படையெடுத்தார்கள். அது ஒரு சிற்றரசு. அதைப் பரர் ஆக்ரமிக்கக்கூடாதென்று ஜர்மனி, ப்ராஞ்சு, ப்ரிடிஷ் முதலான ராஜாங்கத்தார் அதற்கு அபயப்ரதாநம் பண்ணியிருக்கின்றனர். ஆதலால் ஜர்மனி அந்த ப்ரதிஜ்ஞையைக் கடந்து அந்நாட்டைத் தானே கவர்ந்தது. ஆதலாலன்றோ ப்ரிடிஷ் ராஜாங்கத்தார் இந்த யுத்தத்தில் அந்வயிக்க நேர்ந்தது.

இப்போது பெல்ஜியம் தேசத்தில் சற்றேறக்குறைய முழுவதும் ப்ராஞ்சு தேசத்தின் வடகீழ்பாகமும் ஜர்மானியர் வசமாகச் சென்ற பத்து மாதங்களா யிருக்கின்றன. ரஷ்ஷியா தேசத்தின் போலண்டு நாட்டின் சிலபாகமும் அவ்வளவு காலமாக ஜர்மானியர் வசத்திலிருக்கின்றது. இதற்குப் பதிலாக ரஷ்ஷியா தேசத்தார் ஜர்மனியுடன் சேர்ந்த ஆஸ்ட்ரியா தேசத்தின் ஓர் பாகமாகிய கலிஷியா எனும் பிரிவைப் பற்றியிருந்தனர். சென்ற இரண்டு மாஸத்துக்குள்ளாக ஜர்மனி ஆஸ்ட்ரியா தேசத்தார்கள் ரஷ்ஷியா தேசத்தாரிடமிருந்து கலீஷியாவைக் கைப்பற்றினதுமன்றி ரஷ்ஷியாவைச் சார்ந்த போலண்டு நாட்டின் மிகுந்த பாகத்தையும் கவர்ந்தார்கள். அந்நாட்டு ராஜதாநியான வார்ஸா நகரமும் அவர்க்குள்ளாயது. இதனுடன் நிற்காமல் ரஷ்ஷியா தேசத்தார் ஸேனையானது ஜர்மானியர் ஸேனைக்கு முன் பின்னிட்டுக்கொண்டே யிருக்கின்றது. மேல் பாகத்திலோ சென்ற

பத்து மாதமாக உபயத்தார்களுடைய ஸேனைகள் அநேகமாக நின்ற விடத்திலேயே நின்றுகொண்டிருக்கின்றன.

ஸமுத்ரம் முழுவதிலும் ஜர்மானியருடைய ஸேனைக்கப்பல்களும் அவருடைய வர்த்தகக் கப்பல்களும் எங்கும் நிற்காமலிருக்க, ப்ரிடிஷ் ஸேனைக் கப்பல்கள் செய்துவிட்டன. ப்ரிடிஷ் வர்த்தகக் கப்பல்களும் அவர்களுடைய மித்ரர்களுடைய கப்பல்களும் ஸமுத்ரத்தில் இஷ்டப்படி ஸஞ்சரிக்கின்றன. ஜலத்தின் கீழ் ஸஞ்சரிக்கும் சிறு கப்பல்கள், ஸப்மரைன் எனும் பெயர் கொண்டவைகளாய் எல்லா ராஜாங்கத்தார்க்கும் உண்டு. இவற்றின் ஸஞ்சாரம் ஸமுத்திரத்தின்மேலே ப்ரயாணம் செய்பவர்க்குத் தெரியாது. படைக் கப்பலை ஸப்மரைன் கப்பல்கள் அண்டமாட்டா. ஜர்மானியர் ஸப்மரைன் கப்பல்கள் யார்க்கும் தெரியாமல் ஸமுத்ரங்களில் பாவி ஜநங்கள் ஸஞ்சாரத்துக்கும் வர்த்தகத்துக்கும் உதவுகின்ற பல தேசத்தாருடைய கப்பல்களைக் கண்டவிடங்களில் நாசம் செய்து ஸமுத்ரத்தில் மூழ்கும்படிசெய்து, ஜநங்களைக் கொல்லுகின்றன. இவ்வளவன்றி ஜர்மானியர்க்கு ஸமுத்ரங்களில் யோக்யதை யுண்டாகவில்லை.

இதர கண்டங்களில் ஜர்மானியர் பற்றியிருந்த காலனி எனும் நாடுகள், ப்ரிடிஷ் ராஜங்கத்தாராலும் அவர்களுடைய மித்ரர்களாலும் பிடிக்கப்பட்டன. யுத்தத்தின் தத்காலஸ்திதி இவ்வண்ண மிருக்கின்றது.

ஜர்மனி ஆஸ்ட்ரியா தேசமிரண்டிற்கும் ஜநத்தொகை 12 கோடி. ரஷியா ஒன்றிற்கு மாத்ரம் ஜநத்தொகை 12 கோடி. ப்ரிடிஷ் ராஜ்யம் ஐரோப்பா கண்டத்தில் மட்டும் 5 கோடி ஜநத்தொகை கொண்டது. ப்ராஞ்சில் 4 கோடி ஜநங்களும், இடலி தேசத்தில் 4 கோடி ஜநங்களும் இருக்கின்றன. இப்படி ஜர்மனி ஆஸ்ட்ரியாவைக் காட்டிலும் ப்ரிடிஷ் ராஜ்யத்துக்கும் அவர் துணைவர்க்கும் இரட்டிப்பு ஜநங்கள் இருந்தும், ஐரோப்பா யுத்தத்தில் இதுவரையிலும் ஜர்மனியார்க்கு அநுகூலமா யிருப்பானேன்?

இதற்கு ஸமாதாநம் என்னவென்றால், ஜர்மனியார் பல வருஷங்களாய் யுத்தத்திற்கு ஸர்வமுயற்சியும் செய்தனர். அவர் அவ்வண்ணம் செய்கின்றாரெனும் ஸந்தேஹத்தைக் கொஞ்சமும் கொள்ளாமல் இதர தேசத்து ராஜங்கத்தார் இருந்துவிட்டார்கள். ஜர்மனி ஆஸ்ட்ரியா தேசங்களில் இருக்கும் எல்லா ஆண்பிள்ளைகளும் யுத்தத்தொழிலில் பயிற்சி யடைந்தார்கள். இந்த யுத்தத்திற்கு வேண்டிய ஸர்வ ஸாமக்ரிகளும் ஜர்மானியரால் அநேக வருஷங்களாய்ச் சேகரிக்கப்பட்டன. அவர்கள் கப்பல்படையானது நமது ராஜங்கத்தார் படைக்கு ஸரியாகவில்லை. ஆதலால் அவர்கள் எதிர்பார்த்த யுத்தத்தில் அதைப் பந்தோபஸ்து செய்வதற்காக அவர்கள் தேசத்தின் வடக்கேயுள்ள வடகடலுக்கும் பால்டிக் கடலுக்கும் ஸம்பந்தமுண்டாக, நாட்டுக்குள் கீல் கால்வாய் என்றொரு கால்வாயை அபரிமிதமான பொருள் செலவிட்டு வெட்டினார்கள். அதற்குள் அவருடைய போர்க்கப்பல்கள் அபாய

பயமின்றி நிற்கின்றன கால்வாயின் இருகோடியிலும் பெரிய பீரங்கிகள் ஸ்தாபித்த கோட்டைகள் நம்மிராஜாங்கத்தார் கப்பல்கள் அவ்விடங்களை நெருங்கவொட்டாமல் தடுக்கின்றன. இந்தக் கால்வாய் வேலை முடிந்தவுடன் ஜர்மானியர் சண்டைக்காரம்பித்தனர்.

சண்டையாரம்பத்தில் நம்மிராஜங்கத்தாரும் அவர் மித்ரர்களும் ஸேனைத் தொகையில் கூட பகைவரைக்காட்டிலும் குறைந்திருந்தனர். இப்போது ஸேனைத்தொகையில் பகைவரைக் காட்டிலும் இவர் மிக்கவரே. ஆனால் பீரங்கிகளிலும் மற்ற ஆயுதங்களிலும் இவர் பகைவரைக் காட்டிலும் இன்னும் குறைந்திருக்கின்றா ராதலால் ஐரோப்பா கண்டத்தில் பகைவரே மிகுந்து நிற்கின்றார்கள். பகைவருடைய ஆயுதங்களின் ஆதிக்யத்தை யோசிக்க யாவர்க்கும் விஸ்மயம் உண்டாகின்றது. ஆதலால் நம்மிராஜாங்கத்தவர்களும் அவர் துணைவர்களும் தம்முடைய ஆயுதங்களை வ்ருத்திசெய்ய மிகவும் ப்ரயத்நிச்கின்றார்கள். இவர்க்கும் அவர்போல் அஸ்த்ரபலம் ஏற்படும் வரையில் இவர்கள் தங்களுடைய ஸேனைகளைப் பகைவர் பீரங்கிகளுக்கு வீணாக இரையாக்கக் கூடாதென்று, ஜர்மனியின் மேல்புறத்தில் இருந்த விடத்தை விட்டு முன்னிடாமல் இருக்கின்றார்கள். ஜர்மனியின் கீழ்ப்புறம் சண்டைசெய்யும் ரஷ்ஷியா தேசத்தார் தங்கள்ஸேனையை ரக்ஷித்துக்கெண்டு தமது போலண்டுநாட்டையும் பறிகொடுத்துப் பின்னிடுகின்றார்கள்.

நம்மவர்களும் தங்களுடைய அதிகமான ஜநத்தொகைக்குப் பொருந்த ஸேனைத்தொகையை வ்ருத்திசெய்கின்றனர். ஆதலால் இருபுறத்திலும்ஸேனையின் நஷ்டம் ஸமாகமாய் உண்டாய்க்கொண்டிருந்தாலும், முடிவில் ஸேனையில் ஆதிக்யம் நமது பக்கத்தார்க்கு ஏற்படும். ஆயுதங்களும் பகைவர்க்குப் போல் இவர்க்கும் சாலக்ரமேண ஏற்படும். ஸர்வ தேசங்களினின்றும் ஸாமக்ரிகள் இவர்க்குக் கிடைக்கின்றன. ஜர்மானியர்க்கு அவ்வண்ணம் இல்லை. செல்வத்திலும் இவர் பெருத்தவர். ஆதலால் இவர் சாலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கின்றனர். ஜர்மானியரோ சீக்ரமாக ஜெயத்தை அபேக்ஷிக்கின்றனர்: அதாவது, நம் பக்கத்தவருடைய ஸேனைகளை நாசம்செய்ய முயல்கின்றனர். அந்த எண்ணத்திற்கு நமது பக்கத்தார் இடங்கொடாது ப்ராப்தகாலம் வரையில் எப்படியாவது தமதுஸேனைகளை ரக்ஷிக்கவேண்டுமென்று நிச்சயம் செய்திருக்கிறார்கள்.

ஆதலால், நாம் இன்னும் பொறுக்கவேண்டும். ஜர்மானியர் அதர்மத்தை முன்னிட்டுக் காரணமின்றிச் சண்டைக்காரம்பித்தார். நம் ராஜங்கத்தாரும் அவர் துணைவர்களும் தர்ம ரக்ஷணத்தின் பொருட்டும், ஸ்வரக்ஷணத்தின் பொருட்டும் யுத்தம் செய்கின்றனர். என்றும் தர்மத்தையே ரக்ஷித்த பகவான் அவர்கள்- பக்கத்திலிருக்கவேண்டும் என்று நாம் ப்ரார்த்திக்கின்றோம்